# செம்பதாகை

மலர்: 7
இதழ்: 5
வைகாசி 1985
விலை ரூபா 2-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# அரசியல் தீர்வுக்கு வழிகாண

## 5ம் பிரிவையும் 6வது திருத்தத்தையும் வாபஸ் வாங்கு!!

**நா**ட்டு மக்களின் இன்றைய விருப்பம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதாகும். மக்களின் இவ்விருப்பத்தை நிறைவேற்ற பேச்சு வார்த்தை அவசியம். ஆதலால் அப் பேச்சுவார்த்தைக்கு தடையாக உள்ள சகல அம்சங்களும் முதலில் அகற்றப்படல் வேண்டும். அவ்வாறு தடைகள் அகற்றப்பட்டாலே பேச்சு வார்த்தை முழுமை பெறும். அரசியல் தீர்வும் நியாயமான அடிப்படையில் அமையும்.

இனப்பிரச்சினையின் வேகம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதும், அவர்களது உடமைகள் அழிக்கப்படுவதும் நாளாந்த நிகழ்ச்சிகளாகி விட்டது. இதுவரை ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொலையுண்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கில் உடமைகளை இழந்து அகதிகளாகவும், அநாதரவானவர்களுமாக ஆகியுள்ளனர். இலங்கை மண்ணில் இருந்து இந்தியாவுக்கும் அகதிகளாகச் சென்றுள்ளனர். அப்படியானவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை கிட்டவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இப் பிரச்சினையின் தீர்வின்மையால் சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எண்ணிக்கை வீதத்தில் தமிழ் மக்களை விடக் குறைவாக இருந்த போதிலும் அங்கும் அப்பாவிச் சிங்கள மக்கள் கொலைகளுக்கும் சொத்துகள் இழப்புக்கும் ஆளாகி அகதிகளாகி உள்ளனர். கிழக்கில் முஸ்லீம் மக்களும் இவ்வாறான சோக நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். மலையகத்தில் இந்திய வம்சாவழி மக்கள் எந்நேரமும் எதுவும் நேரலாம் என்ற அச்சத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர். தெற்கின் தொலைவில் வாழும் சிங்கள மக்கள் கூட 'புலிகள்' வந்து விடுமோ என்ற பீதியுடன் காணப்படுகின்றனர்.

ஆதலால் பேரினவாத வெறி கொண்டவர்கள் இனப் பிரச்சினை பற்றி எவ்வளவுதான் அசட்டையாகப் பேசினாலும் நாட்டு மக்களைப் பொறுத்தவரை இன்றைய மோசமான இரத்தமும் கண்ணீரும் கொண்ட நிலைக்கு காரணமான இனப் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என்றே விரும்புகிறார்கள். அத்தீர்வு அரசின் சில தலைவர்கள் சவால் விடுவதுபோல் ராணுவத் தீர்வாக அமைவதை எப்பிரிவு மக்களுமே விரும்பவில்லை. அரசியல் தீர்வையே சகலரும் விரும்புகிறார்கள். எதிர்க்கட்சிகள் யாவுமே அரசியல் தீர்வு வேண்டும் என்றே கூறுகின்றன. மகாசங்கத்தினரும் அவ்வாறே கூறுகிறார்கள். வேறும் பொது ஸ்தாபனங்கள், பிரமுகர்கள், தேச நலன் விரும்பும் அனைவருமே அரசியல் தீர்வு வேண்டும் என்றே வற்புறுத்துகிறார்கள்.

இவ்வாறு அரசியல் தீர்வின் அவசியம் எப்பொழுதையும்விட இன்று முக்கியத்துவம் பெறுகின்ற போதிலும் அது எவ்வாறு அடையப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து உருவாக்கப்படல் வேண்டும். அரசியல் தீர்வுக்கு இந்தியாவின் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் அவசியம் என்பதை இந்தியாவிற்கு சவால் விட்டவர்களே இன்று உணர்ந்து கீழ் இறங்கியுள்ளனர். அது வரவேற்கக்

(6-ம் பக்கம் பார்க்க)

# தரையிலும் கடலிலும் இடம்பெறும் படுகொலைகளுக்கு முடிவு வேண்டும்!


**அ**ண்மைக் காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலைச் செயல்கள் தீவிரப் படுத்தப் பட்டுள்ளன. காரணங்கள் இன்றியே கொலைக் காரியங்கள் முடிந்த சந்தர்ப்பங்கள் பல. ஒன்றின் அதிர்ச்சி மக்கள் மனதை விட்டு அகலுவதற்கு முன்பாக அடுத்த சம்பவம் நிகழ்ந்து வருகின்றன. இவற்றுக்குப் பொறுப்பு ஏற்கவேண்டிய ஆட்சியினர் முதலில் அப்படிச் சம்பவம் எதுவுமே நடக்கவில்லை என்று கூறுவார்கள். பின்பு உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரச்சினை கிளப்பப்பட்டதும் 'அது பயங்கரவாதிகளின் செயல்' என்று மிக லேசாக விடயத்தை விட்டு விடுவார்கள். அதே வேளை தம்பக்கத்தில் ஏதாவது இடம்பெற்று விட்டால் வானொலியிலும், தொலைக் காட்சியிலும், பத்திரிகைகளிலும் 'பயங்கரவாதிகளின் ஆபத்துப்' பற்றி அலறித்துடிப்பார்கள். இதுவே இன்றைய ஆட்சித்துறையின் போக்காகும்.

இம் மாத முற்பகுதியில் வல்வெட்டித்துறையிலும், நெடுந்தீவுக் கடலிலும் இடம்பெற்ற மனிதவதைச் சம்பவங்கள் அதிர்ச்சிக்குரியவை மட்டுமன்றி அருவருக்கத்தக்கவையும் ஆகும். இவ்வாறான சம்பவங்களை மனித உருவில் உலாவும் மிருகங்களால் மட்டுமே செய்யமுடியும். வல்வெட்டித்துறையில் பொலிகண்டி என்னும் கிராமத்தில் கடலோரம் அமைந்துள்ள ஒரு சன சமூக நிலையக் கட்டிடத்தினுள் இருபத்தைந்துக்கு மேற்பட்டோரை உயிருடன் அடைத்து வைத்துவிட்டு அக்கட்டிடத்தை குண்டுவைத்து தகர்த்துள்ளனர் இம்மனித மிருகங்கள். மனித உடல்கள் சின்னாபின்னமாகி மரங்களின் கூட இரத்தமும் சதைகளும் அப்பிண்டு கிடந்ததாக மக்கள் கூறுகின்றனர். இவ்வாறு செய்தவர்கள் விட்ட ஒரே ஒரு குறை அச்சதைகளை எடுத்துச்சென்று உணவாக உட்கொள்ளாது விட்டதுதான். அப்படிச் செய்திருந்தால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு ராணுவம் அன்று வியட்நாமில் மனித ஈரலை வெட்டி உண்ட வரலாற்றுச் சம்பவங்களை மிஞ்சியிருப்பார்கள்.

இதேபோல் நெடுந்தீவுக் கடலில் படகில் பிரயாணம்

(6-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மேதினக் கூட்டங்கள்




சங்கானை, புத்தூர், பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களில் நடைபெற்ற மேதினக் கூட்டங்களில்: இடமிருந்து முதலாவது படத்தில் புத்தூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமைதாங்கி உரையாற்றுவதையும், இரண்டாவது படத்தில் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் தோழர் கே. செந்திவேல் சங்கானைக் கூட்டத்தில் உரையாற்றுவதையும், மூன்றாவது படத்தில் மேதினக் கூட்டங்களில் கலந்து கொண்ட மக்களில் ஒருபகுதியினரையும் காணலாம்.

# இலங்கை - இந்திய உறவு சீர்குலையுமா? சீரடையுமா?

1977ல் யூ. என். பியும்—ஜே. ஆரும் பதவிக்கு வந்தபோது இந்தியாவில் ஜனதா அரசு பதவியில் இருந்தது. ஜனதா அரசின் தேசிய, சர்வதேசியக் கொள்கைகள் பலவற்றுடன் ஜே. ஆருக்கு இணக்கம் இருந்தது. காரணம இரு பகுதியினரும் அமெரிக்காவிற்கு அதிக விசுவாசம் உடையவர்களாக விளங்கியதுதான். அதனால் அன்றைய இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாயை இலங்கைக்கு அழைத்து ஜே. ஆரும் யூ. என். பியும் உபசாரம் செய்து கௌரவித்தனர். இந்த வைபவத்தில் உரையாற்றிய ஜே. ஆர். அன்று பதவி இழந்திருந்த இந்திரா காந்திக்கு எதிராகப் பகிரங்கமான கருத்துக்களையும் தெரிவித்திருந்தார். ஆனால் அவரது கெட்ட காலம் இவ்வாறு பேசிய சில மாதங்களிலேயே ஜனதா அரசு கவிழ்ந்தது. பொதுத்தேர்தலில் இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்துவிட்டார். ஜனதாவிற்குப் பின்னால் அமெரிக்கா இருந்தது போல் இந்திரா காந்திக்குப் பின்னால் சோவியத் யூனியன் என்ற நிலையில் ஜே. ஆர் இந்தியாவிடம் இருந்து தூரவிலகி இருக்க வேண்டியேற்பட்டது. இத்தூரவிலகலின் இடைவெளியை அதிகரிக்க இலங்கையின் இனப்பிரச்சினையானது பிரதான ஒரு காரணியாகவும் மாறியது. 1983 யூலை இனவாத வன்செயல்கள் இருநாட்டு உறவுகளிலும் அதிக சீர்குலைவுகளை ஏற்படுத்தின. இந்தியா இச் சந்தர்ப்பத்தில் சற்று கடும் தொனியில் இலங்கையுடன் நடந்து கொள்ள ஆரம்பித்தது. தனது சொந்த அரசியல், பொருளாதார ஆதாயங்களுக்காக மீண்டும் மீண்டும் இனவாத வன்செயல்களைத் தூண்டி தமிழ் மக்களை மோசமாக நடத்திய காரணத்தால் இதுபற்றிய விளக்கத்தை இந்தியா இலங்கையிடம் கேட்க வேண்டிய நிலையை இலங்கை அரசே ஏற்படுத்திக் கொண்டது. அரசு பின்பற்றிய இனப்பிரச்சினை சம்பந்தமான தவறான நிலைப்பாட்டின் பலவீனம் இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டுக்கு வழி வகுத்தது. பல வழிகளாலும் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய விடயத்தில் இந்தியாவைத் தலையிட வைத்த சூழ்நிலையை உருவாக்கிய குற்றச்சாட்டிற்கு இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும்.

## சமஞானி

இலங்கை இந்திய உறவு மோசமாகச் சீர்குலைய ஆரம்பித்த 83 யூலை இனவாதவன் செயல் காலத்தில் இருந்து அண்மைக்காலம் வரை இந்தியாவில் இருந்து வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ், ஜீ. பார்த்தசாரதி, ரமேஸ் பண்டாரி ஆகியோர் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர் அதேபோல் இலங்கையிலிருந்து ஜனாதிபதியின் விஷேட தூதர் எச். டபிள்யூ ஜயவர்த்தனா, வெளிவிவகார அமைச்சர் ஹமீது, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, எஸ்ட்மன் விக்கிரசிங்கா ஆகியோர் சென்றிருக்கிறார்கள். ஜனாதிபதியும் அங்கு சென்றிருக்கிறார். இவர்களைவிட இரு இருநாடுகளின் தூதுவர்கள் பல தடவைகள் அங்கும் இங்கும் பறந்திருக்கிறார்கள். இத்தனைக்கும் மத்தியில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவு சீரடைவதற்குப் பதிலாகச் சீர்குலைந்தே வந்துள்ளது. இச் சீர்குலைவிற்கு இருநாடுகளுக்கும் பின்னால் இரு வல்லரசுகள் இருந்துவருவது மறைக்கப்படக் கூடியதொன்றல்ல என்றபோதும் இலங்கை அரசு இனப்பிரச்சினை பற்றிய அரசியல் தீர்வுக்கு மறுத்து வரும் பிடிவாத நிலையே உறவுகளை மேலும் மோசமடையச் செய்து வருகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது.

இலங்கை இந்திய உறவில் சிக்கல்களைக் கொண்டிருந்த இரண்டு பிரச்சினைகளை இருநாடுகளும் பிரச்சினை இன்றிப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொண்ட முன் உதாரணம் ஏற்கனவே உண்டு. ஒன்று இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழி மக்கள் பற்றியது. இரண்டாவது கச்சதீவு பற்றியதாகும். இவ்வாறு ஒரு முன்னுதாரணம் இருக்கும்போது அதைப் பின்பற்றாது இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கும், நியாயமான தீர்வுக்கும் இணங்க இலங்கை அரசு மறுப்பது நிலைமைகளை மோசமடையச் செய்யவே உதவும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா வகிக்க விரும்பும் எதிர்காலப் பாத்திரம் பற்றியோ அன்றி அதற்கு சோவியத்யூனியன் உதவி செய்துவருவது பற்றியோ பேசுவதனால் அது விவாதத்துக்குரிய மற்றொரு விடயமாகும். ஆனால் இலங்கையின் பிரச்சினையை பொறுத்து இந்தியாவை தற்போதைக்கு அதிகம குற்றம் சாட்ட முடியாது. முழுமையான குற்றவாளியாக முன் நிற்பது இலங்கை அரசுதான். இந்நாட்டிற்குள் மிகவும் இலகுவாகவும், திருப்தியகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தமிழ்பேசும் மக்களைத் திருப்திப்படுத்தி ஒற்றுமையான வாழ்வுக்கு வழி சமைத்திருக்கமுடியும். தனது பக்கத்தில் இருந்தவர்களைக் கூட நிர்ப்பந்தப்படுத்தி இந்தியாவின் பக்கத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு இன்று ஒரு நேரம் சவாலும், மறு நேரம் குற்றச்சாட்டும், இந்தியாவிற்கு எதிராக வைத்துவரும் இலங்கை அரசால் இலங்கை இந்திய உறவின் சீர்குலைவைத் தடுக்க முடியுமா என்பது சந்தேகமே. இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியத் தலையீட்டின் தன்மையை இல்லாமல் செய்யவும், இலங்கையின் இறமை, சுதந்திரம் என்பனவற்றைப் பாதுகாக்கவும் உள்ள ஒரேவழி இந்தியாவின் ஒத்துழைப்புடனும் நல்லெண்ணத்துடனும் இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் இணக்கமானதும் நியாயமானதுமான தீர்வை விரைவாக அடைய முனையவேண்டும் என்பதேயாகும். இதற்கான அதிக பொறுப்பை இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும். இதை விடுத்து ஆயுதக் குவிப்பிலும், அடக்குமுறை அதிகரிப்பிலும், ராணுவத் தீர்விலும் இலங்கை அரசு முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுமானால் இலங்கை—இந்திய உறவு சீரடையக் கூடிய சூழ்நிலை உருவாக மாட்டாது. பதிலாக விபரீத விளைவுகளையே இலங்கை இந்திய உறவு எதிர் கொள்ள நேரிடும். ✱

# எருதுகள் மோதினால் ஓநாய்க்கு நன்மை

ஏப்பிரல் 85ல் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்ட தமிழர்-சோனகர் மோதலுக்கு அரசாங்கக்கட்சியினரின் தூண்டுதல் பின்னணியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது யூ. என். பி பேரினவாத வெறியர்களது மனத்தைக் குளிர்வித்திருக்கும் என்பது பற்றி நமக்கு ஐயமில்லை. இந்த மோதல் தேசிய ஒற்றுமைக்குப் பாதகமானதும் முற்போக்கு சக்திகட்குச் கெடுதலானதும் என்பது பற்றி நமக்குள் முரண்பாடுகள் இல்லை. ஆயினும் இம் மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் நாம் முன்னமே எச்சரித்த விஷயங்கள் பற்றிச் சில தீவிரவாத சக்திகள் காட்டிய அசட்டையுடன் நெருங்கிய தொடர்பு உடையன.

முஸ்லீம் மக்களது உரிமைக்காகப் போராடும் கடமை தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல நாட்டின் ஒடுக்கப்பட்ட சகல இன மக்களுக்கும் அந்தப் பெறுப்பு உண்டு, மலையக மக்கள் மீதோ முஸ்லீம்கள் மீதோ தமிழ் ஈழம் எனும் தீர்வையோ அல்லது ஒரே தமிழ்ப்பிரதேச சுயாட்சி எனும் தீர்வையோ அல்லது வேறு எவ்வாறான தீர்வையோ பலவந்தமாகத் திணிக்கும் முயற்சிகள் கெடுதலானவையும், தவறானவையும் என்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களிற் சுட்டிக்காட்டியுள்ளோம்.

'குற்றவாளி'களைத் தண்டிக்கும் நீதிமன்றங்களாகத் தனிநபர்களும் குழுக்களும் செயற்படுவது மக்கள் விரோதமானது என்றும் பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

'தமிழ் ஈழத்தில்' தங்களது நிலைபற்றி முஸ்லீம்கட்கும், மலையக மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் உள்ள நியாயமான அச்சங்கள் பற்றி எவ்வித மான அக்கறையுமற்றவர்கள் எவ்வாறு அவர்களுக்கும் சேர்த்து தமிழ் ஈழம் கேட்க முடியுமோ தெரியவில்லை. முஸ்லீம் மக்களின உணர்வுகளையும், அவர்களது மத நடைமுறைகளையும் ஒருவகையான ஏளனக் கண்ணோட்டத்துடன் அணுகும் போக்கு தமிழ்கக்கள் மத்தியில் உள்ள ஆளும் வர்க்கத்தினரிடம் ஏற்கனவே இருந்து வந்ததை யாரும் மறுக்கமுடியாது. இஸ்லாமிய மத உணர்வுகளை மதிக்க யாரும் முஸ்லீமாக இருக்க அவசியமில்லை. உண்

(6-ம் பக்கம் பார்க்க)

## 2ம் தரப் பிரஜைகள்

........ 3ம் பக்கத் தொடர்

இருப்பவர்கள் தமிழர்கள் தான் என்றும், இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை

மட்ட உழைக்கும் மக்களுக்கு எதிராகவும் செயல்படுத்தப்

[illegible] வைபவத்தில் உரையாற்றிய ஜே. ஆர். அன்று பதவி இழந்திருந்த இந்திரா காந்திக்கு எதிராகப் பகிரங்கமான கருத்துக்களையும் தெரிவித்திருந்தார். ஆனால் அவரது கெட்ட காலம் இவ்வாறு பேசிய சில மாதங்களிலேயே ஜனதா அரசு கவிழ்ந்தது. பொதுத்தேர்தலில் இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்துவிட்டார். ஜனதாவிற்குப் பின்னால் அமெரிக்கா இருந்தது போல் இந்திரா காந்திக்குப் பின்னால் சோவியத் யூனியன் என்ற நிலையில் ஜே. ஆர் இந்தியாவிடம் இருந்து தூரவிலகி இருக்க வேண்டிஏற்பட்டது. இத்தூரவிலகலின் இடைவெளியை அதிகரிக்க இலங்கையின் இனப்பிரச்சினையானது பிரதான ஒரு காரணியாகவும் மாறியது. 1983 யூலை இனவாத வன்செயல்கள் இருநாட்டு உறவுகளிலும் அதிக சீர்குலைவுகளை ஏற்படுத்தின. இந்தியா இச் சந்தர்ப்பத்தில் சற்று கடும் தொனியில் இலங்கையுடன் நடந்துகொள்ள ஆரம்பித்தது. தனது சொந்த அரசியல், பொருளாதார ஆதாயங்களுக்காக மீண்டும் மீண்டும் இனவாத வன்செயல்களைத் தூண்டி தமிழ் மக்களை மோசமாக நடத்திய காரணத்தால்

# சமஞானி

இலங்கை இந்திய உறவு மோசமாகச் சீர்குலைய ஆரம்பித்த 83 யூலை இனவாதவன் செயல் காலத்தில் இருந்து அண்மைக்காலம் வரை இந்தியாவில் இருந்து வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ், ஜீ. பார்த்தசாரதி, ரமேஸ் பண்டாரி ஆகியோர் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர் அதேபோல் இலங்கையிலிருந்து ஜனாதிபதியின் விஷேட தூதர் எச். டபிள்யூ ஜயவர்த்தனா, வெளிவிவகார அமைச்சர் ஹமீது, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, எஸ்ட்மன் விக்கிரசிங்கா ஆகியோர் சென்றிருக்கிறார்கள். ஜனாதிபதியும் அங்கு சென்றிருக்கிறார். இவர்களைவிட இரு இருநாடுகளின் தூதுவர்கள் பல தடவைகள் அங்கும் இங்கும் பறந்திருக்கிறார்கள். இத்தனைக்கும் மத்தியில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு சீர்டைவதற்குப் பதிலாகச் சீர்குலைந்தே வந்துள்ளது. இச் சீர்குலைவிற்கு இரு நாடுகளுக்கும் பின்னால் இரு வல்லரசுகள் இருந்துவருவது மறைக்கப்படக் கூடியதொன்

[illegible] இரண்டாவது கச்சதீவு பற்றியதாகும். இவ்வாறு ஒரு முன்னுதாரணம் இருக்கும்போது அதைப் பின்பற்றாது இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கும், நியாயமான தீர்வுக்கும் இணங்க இலங்கை அரசு மறுப்பது நிலைமைகளை மோசமடையச் செய்யவே உதவும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா வகிக்க விரும்பும் எதிர்காலப் பாத்திரம் பற்றியோ அன்றி அதற்கு சோவியத்யூனியன் உதவி செய்துவருவது பற்றியோ பேசுவதனால் அது விவாதத்துக்குரிய மற்றொரு விடயமாகும். ஆனால் இலங்கையின் பிரச்சினையை பொறுத்து இந்தியாவை தற்போதைக்கு அதிகம் குற்றம் சாட்ட முடியாது. முழுமையான குற்றவாளியாக முன் நிற்பது இலங்கை அரசுதான். இந்நாட்டிற்குள் மிகவும் இலகுவாகவும், திருப்தியாகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தமிழ்பேசும் மக்களைத் திருப்திப்படுத்தி ஒற்றுமையான வாழ்வுக்கு வழி சமைத்திருக்கமுடியும். தனது பக்கத்தில் இருந்தவர்களைக் கூட நிர்ப்பந்தப்படுத்தி இந்தியாவின் பக்கத்திற்கு அனுப்பி

ஏப்பிரல் 85ல் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்ட தமிழர்-சோனகர் மோதலுக்கு அரசாங்கக்கட்சியினரின் தூண்டுதல் பின்னணியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது யூ. என். பி பேரினவாத வெறியர்களது மனத்தைக் குளிர்வித்திருக்கும் என்பது பற்றி நமக்கு ஐயமில்லை. இந்த மோதல் தேசிய ஒற்றுமைக்குப் பாதகமானதும் முற்போக்கு சக்திகட்குச் கெடுதலானதும் என்பது பற்றி நமக்குள் முரண்பாடுகள் இல்லை. ஆயினும் இம்மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் நாம் முன்னமே எச்சரித்த விஷயங்கள் பற்றிச் சில தீவிரவாத சக்திகள் காட்டிய அசட்டையுடன் நெருங்கிய தொடர்பு உடையன.

முஸ்லீம் மக்களது உரிமைக்காகப் போராடும் கடமை தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல நாட்டின் ஒடுக்கப்பட்ட சகல இன மக்களுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு, மலையக மக்கள் மீதோ முஸ்லீம்கள் மீதோ தமிழ் ஈழம் எனும் தீர்வையோ அல்லது ஒரே தமிழ்ப்பிரதேச சுயாட்சி எனும் தீர்வையோ அல்லது வேறு எவ்வாறான தீர்வை

கும் முயற்சிகள் கெடுதலானவையும், தவறானவையும் என்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களிற் சுட்டிக்காட்டியுள்ளோம்.

‘குற்றவாளி’களைத் தண்டிக்கும் நீதிமன்றங்களாகத் தனிநபர்களும் குழுக்களும் செயற்படுவது மக்கள் விரோதமானது என்றும் பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

‘தமிழ் ஈழத்தில்’ தங்களது நிலைபற்றி முஸ்லீம்கட்கும், மலையக மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் உள்ள நியாயமான அச்சங்கள் பற்றி எவ்விதமான அக்கறையுமற்றவர்கள் எவ்வாறு அவர்களுக்கும் சேர்த்து தமிழ் ஈழம் கேட்க முடியுமோ தெரியவில்லை. முஸ்லீம் மக்களின் உணர்வுகளையும், அவர்களது மத நடைமுறைகளையும் ஒருவகையான ஏளனக் கண்ணோட்டத்துடன் அணுகும் போக்கு தமிழ்கக்கள் மத்தியில் உள்ள ஆளும் வர்க்கத்தினரிடம் ஏற்கனவே இருந்து வந்ததை யாரும் மறுக்கமுடியாது. இஸ்லாமிய மத உணர்வுகளை மதிக்க யாரும் முஸ்லீமாக இருக்க அவசியமில்லை. உண்

(6-ம் பக்கம் பார்க்க)

## 2ம் தரப் பிரஜைகள்

........3ம் பக்கத் தொடர்

உயர்வர்க்க ஆட்சியை நிலைநிறுத்தவே முயன்றனர். அவர்களது அபிலாஷைகளுக்கு அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் உதவிகளும் ஒத்தாசைகளும் வழங்கின. இதனால் இன, மொழி, மத விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டு இனங்களுக்கிடையிலான பகைமைகள் தூண்டப்பட்டு வளர்க்கப்பட்டன. இருமொழிபேசும் நாட்டில் ஒரு மொழி குறுகிய ஆட்சி அதிகாரப் போட்டியை மையமாக வைத்து ஆட்சி மொழியாகியது. பல மதம் நிலை கொண்ட நாட்டில் தனி ஒரு மதம் அரசமதமாகியது. பல இன மக்கள் பல்லாண்டு காலம் ஒற்றுமையாக வாழ்ந்த நாட்டில் இந்நாடு தனி ஒரு இனத்தின் நாடு என்ற வெறி பரப்பப்பட்டது. இவை யாவும் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்டு அதிகாரத்தில் இருந்த உயர் ஆளும் வர்க்கத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டபோது நாட்டின் தமிழ்பேசும் மக்களின் பல் வேறுபட்ட உரிமைகள் பறிக்கப்பட்டன, மறுக்கப்பட்டன, உதாசீனம் செய்யப்பட்டு புறக்கணிப்புகளுக்கு உள்ளாகின. தமிழ் மக்கள் விரக்திக்கும் வெறுப்பு நிலைக்கும் உள்ளாகினர்.

இக்கால கட்டத்திலேயே யூ. என். பியும் — ஜே. ஆரும் 77ல் பதவிக்கு வந்தனர். அதன் பின்னர்தான் பாகுபாடு, புறக்கணிப்பு, உரிமைகள் மறுப்பு என்ற நிலையில் இருந்த தமிழ் மக்களுக்கு எதிரான நடைமுறைகள் சொல்லிலும் செயலிலும், எழுத்திலும் நடைமுறையிலும் அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக இந்நாட்டில் நடத்துவதற்கான நடைமுறைகள் தோன்றி வளர்ந்தன. இந்த அரசு பதவிக்கு வந்த ஒரிரு மாதங்களிலேயே நாட்டின் தலைவராக இருந்தவர் தன் நாட்டின் ஒரு பிரிவு பிரஜைகளைப்பார்த்து ‘போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்’ என்று கோஷம் வைத்த அன்றே தமிழ் மக்கள் இந் நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதற்கான முன்னறிவிப்பு வெளிப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து தொடங்கிய செயல்பாடுகளின் வளர்ச்சியை வரிசைப்படுத்தினால் இன்றைய உச்ச நிலையின் தன்மைகளினூடே தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டு வருவதைக் காணமுடியும். தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதை இன்று விளக்கமாக விளங்கப்படுத்த வேண்டிய அவசியத்தை அண்மைக்கால அன்றாட சம்பவங்கள் இல்லாமல் செய்கின்றன. தமிழ் மக்களுக்கும், அவர்கள் வாழும் பிரதேசங்களுக்குமென உருவாக்கப்பட்ட சட்டங்களும், நடைமுறைகளும், செயல்பாடுகளும் இன்று உலகறிந்தவை. இவை தமிழ் மக்களை இரண்டாம் தர நிலைக்கு தள்ளி வைத்துள்ளன என்பதும் நிதர்சன உண்மை. இதை மறுக்கமுனைவோர் வெறிகொண்ட பேரினவாத ஆட்சிக்கு ஆலவட்டம் பிடிப்போராக மட்டுமே இருக்க முடியும்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் உண்டு என்றும் அந்தப் பதவியில், இந்தப் பதவியில் இருப்பவர்கள் தமிழர்கள் தான் என்றும், இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்றும் வெளி உலகுக்கு காட்ட எவ்வளவுதான் முயன்ற போதிலும் நாட்டின் பெரும் பான்மையான மக்களும், சர்வதேச சமூகமும் தமிழ்மக்கள் இலங்கையில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பதை உணரவே செய்கின்றனர். இன்று தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் நாளை விரைவாகவே சிங்கள மக்களின் பெரும்பான்மையான கீழ் மட்ட உழைக்கும் மக்களுக்கு எதிராகவும் செயல்படுத்தப் படலாம். இதைச் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு ஜனநாயக புரட்சிகர சக்திகள் உணரவே செய்கின்றனர். தமிழ் பேசும் மக்களாயினும் சிங்கள மக்களின் உழைக்கும் வர்க்கமாயினும் ஆளும் வர்க்கத்தினரால் எவ்வகையிலேனும் இந்நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதை அனுமதிக்கக் கூடாது.

## வினா இங்கு! ★

இன்றைய அரசு பதவிக்கு வருவதற்கு முன்பு வடக்கு கிழக்கு மாகாணங்களில் சாதாரண விற்பனையிலும்—விலையிலும் இருந்த ஒரு பொருள் இப்பொழுது அதிக விற்பனையையும்—விலையையும் பெற்றிருக்கிறது. அப்பொருள் என்ன?

★ விடை அங்கு!

கடைசிப் பக்கம்

# தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் பாதையில்
# ஆழமாகச் சிந்திக்க வேண்டிய சில அம்சங்கள்

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் என்றுமில்லாதவாறு மிகவும் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பாசிச வழி முறைகளைக் கையாளும் ஒரு பேரினவாத ஆட்சியின் கீழ் அவர்கள் உயிர் உடமைகளை இழந்து திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு ஆளாகிவருகிறார்கள். இத்தகைய கொடூரம் மிக்க நிலையில் இருந்து தமிழ் மக்களுக்கு ஒரு விமோசனம் அவசியமாகிறது. அவ் விமோசனம் ஒரு விடுதலைப் போராட்டப்பாதையில் மட்டுமே சாத்தியமாகக் கூடியதொன்றாகும். அப்படியானால் அவ் விடுதலைப் போராட்டப் பாதை எந்த அடிப்படையில் எவ்வாறான வழிமுறைகளில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பது ஆழமான சிந்தனைக்குரிய அம்சமாகும்.

தமிழ் பேசும் மக்களிடையே நிலவும் இன்றைய சூழ்நிலை ஆழமான அரசியல் சிந்தனைக்கு உரிய ஒரு காலமாகும். ஏனெனில் தமிழ் மக்களின் விமோசனத்திற்கென முன்வைக்கப்பட்ட ஒரு கொள்கை, அக் கொள்கையை நடைமுறைப் படுத்தி தமது இலக்கை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் என்பனவற்றின் சாதக பாதக விளைவுகள் உண்மையான ஒரு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எந்த ஒரு கட்சியாயினும், விடுதலை இயக்கமாயினும் தமது கொள்கை, நடைமுறை, வேலைத்திட்டம் என்பவற்றைக் குறைந்தது பத்தாண்டுகளுக்கு ஒருமுறையாவது மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது அவசியம். அவ்வாறான பரிசீலனை முற்றிலும் மக்கள் நலன் சார்ந்த நிலையில் விமர்சனமாகவும், சுய விமர்சனமாகவும் அமைந்தால் அது தமிழ் மக்களின் விடுதலைப் பாதைக்கு புதியதோர் நிலையைத் தோற்றுவிக்க முடியும்.

ஒரு நாட்டின், ஒரு வர்க்

யதார்த்த நிலைமைகளின் அடிப்படையில் வகுக்கப்பட வேண்டியவையாகும். இடம் பெற்ற சம்பவங்களின் உணர்ச்சிப் பெருக்கால் இக் கொள்கை வகுக்கப்படுவதற்குப் பதிலாக நாடு, நாட்டு மக்கள். பூகோள, அரசியல், பொருளாதார, கலாச்சார அம்சங்கள் மட்டுமன்றி தேசிய சர்வதேசிய சூழ்நிலைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் போன்றனவும் இக் கொள்கை வகுப்பில் அடிப்படைக் கவனத்திற்குரியவையாகும். மேலும் இக் கொள்கை வகுக்கப்படும் போது கடந்தகால வரலாறு சரியான விதத்தில் விளங்கிக்கொள்ளப்படல் வேண்டும். கடந்த காலத்தைப்பற்றி அக்கறை எதுவுமின்றி நிகழ்காலத்திற்கான சரியானகொள்கையை வகுக்க முடியாது. அவ்வாறால் ஒரு நிச்சயமான எதிர்காலத்தை எவ்வாறு வென்றெடுக்க முடியும் என்பது பெரும் கேள்விக் குறியாகும்.

தமிழ் மக்களின் விடுதலைக்கென இதுவரை எக் கொள்கையும் வகுக்கப்படவில்லை என யாரும் வாதிட முடியாது. ஆனால் இதுவரை வகுக்கப்பட்ட கொள்கைகள் எவ்வளவு தூரத்திக்கு மேற்கூறப்பட்ட அடிப்படை அம்சங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டன என்பதே விவாதத்திற்குரியவையாகும். அதேவேளை இக் கொள்கைகள் எவ்வளவிற்கு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மக்கள் தமது அன்றாடவாழ்வில் இக் கொள்கைகளை ஒன்றாக இணைத்துக் கொண்டார்களா என்பது பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டியவையாகும். ஒட்டுமொத்தமாக, மேலெழுந்த வாரியாக அல்லது ஒரு மானசீகமாக விஷயங்களை அணுகுவதற்குப் பதிலாக மக்களின் அடிமட்ட அபிலாஷைகளுடன் வகுக்கப்பட்ட கொள்கையாக அமைந்துள்ளதா என்று பரீட்சிப்பதும் நடைமுறைத் தேவையாகும். எனவே இன்றைய நிலையில் தமிழ் மக்க

விளைவுகளின் அனுபவங்களாலும் மீள் பரிசீலனை செய்து உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

அடுத்த அம்சம் என்னவெனில் ஒரு சரியான கொள்கையை நடைமுறைப்படுத்தவும் அதன் இலக்கை அடையவும் பின்பற்றப்பட வேண்டிய பன்முக நடைமுறைகளாகும். இதில் ஒன்று ஸ்தாபனமாகும் எந்த மக்களின் விடுதலைக்கு எனக் கொள்கை வகுக்கப்பட்டதோ அந்த மக்களின் அடிமட்ட வாழ்வுவரை அக் கொள்கையை உரிய வழிகளில் எடுத்துச் செல்லக் கூடிய ஸ்தாபனப் பலத்தைத் தேடிக் கொள்வது அவசியமாகும். இதில் மக்களை ஒரு பொருட்டாக மதிக்காத, தங்களைவிட வீரர்கள் யாருமே இல்லை என்ற இறுமாப்பை உடைய, ஏட்டிக்குப் போட்டியாக ஏதோ ஸ்தாபனப் பெயர்களை மட்டும் விளம்பரம் செய்கின்ற ஸ்தாபன அமைப்பு

**வெகுஜனன்**

எதுவாக இருந்தாலும் அதனால் மக்கள் என்ற அந்தப் பெரும் சமுத்திரத்தை அண்மிக்க முடியாது. மக்களை மனதார நேசித்து அவர்களின் விடுதலைக்கு தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்கும் தன்மை கொண்டவர்களால் உருவாகக் கூடிய ஸ்தாபனத்தினால் மட்டுமே மக்களை அணுகி அவர்களை ஒரு போராட்டத்திற்கு அணிதிரட்ட முடியும்.

கொள்கையும் ஸ்தாபனமும் சரியான வகையில் அமைக்கப்பட்டால் அதன் அடிப்படையில் போராட்டத் தந்திரோபாயங்களும் வகுக்கப்பட முடியும். கொள்கை ரீதியில் எதிரியார்? நண்பன் யார்? என்று தீர்மானிக்கப்பட்டால் எதிரியைத் தனிமைப்படுத்தி தாக்கி அழித்தொழித்து முன்னேற நண்

ரீதியில் கூட எதிரிக்குப் பலவீனத்தையும், மக்களுக்கு பலத்தையும் ஏற்படுத்தக் கூடியதொன்றாகும். இதன் நடைமுறைச் சாதக பாதக விளைவுகளை சமகால நடைமுறைகளில் இருந்தும் படித்துக் கொள்ள முடியும். போராட்டத் தந்திரோபாயங்கள் கூட வெளிநாட்டு அனுபவங்களை அப்படியே பிரதி பண்ணக் கூடியவை அல்ல. நமது பூகோள, அரசியல், பொருளாதார, கலாச்சார அம்சங்களுக்கு இசைவானதாக உருவாக்கப்படல் வேண்டும். ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டால் அதன் வெற்றி தோல்விகள் நிச்சயம் பரிசீலனைக்கு எடுக்கப்படல் வேண்டும். மக்களின் அபிப்பிராயங்களில் பயன் உள்ளவற்றை உள்வாங்கிக்கொள்வது அவசியம். எதிரிக்கு கூடிய அழிவையும் மக்களுக்கு குறைந்த சேதத்தையும் கொண்டுவரக்கூடிய போராட்ட முறைகள் தான் மக்களை உற்சாகப்படுத்தி ஒரு போராட்டத்தில் அவர்களையும் பங்கெடுக்க வைக்கும். அல்லது தாங்கிக்கொள்ள முடியாத துன்பத்தால் மக்கள் விரக்தியுறும் சந்தர்ப்பங்களும் தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும். அது போராட்டத்தின் பாதையில் தளர்வையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தி விடக் கூடிய நிலையையும் கவனத்திற் கொள்வது அவசியம். ஒரு விடுதலைப் போராட்டத்திற்கென வகுக்கப்பட்ட கொள்கையாயினும், அதை அடைவதற்கான போர்த் தந்திரோபாயமாயினும் அவை நடைமுறை என்ற பரீட்சைக் களத்தில் மீண்டும் மீண்டும் அனுபவங்களைத் தொகுத்து மக்களுக்கும் போராட்டத்தின் முன்னேற்றத்திற்கும் பாதிப்புக்களை —பின்னடைவுகளை தரக் கூடிய அம்சங்களைத் துணிந்து நிராகரித்து சரியானவற்றைப் பேணி வளர்த்து முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் விடு

படுத்தப்பட்ட போராட்ட வழிமுறைகளும் மக்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையில் பரிசீலனைக்கும், திருத்தங்களுக்கும் தேவை ஏற்படின் மாற்றி அமைத்தலுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்ய முன்வராதுவிட்டால் மக்களை இன்றைய அபாயக்கட்டத்தில் இருந்து மீட்டெடுத்து உண்மையான தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கமுடியாது. பல ஸ்தாபனங்களுக்கும், பல சக்திகளுக்கும் பல்வேறு அபிப்பிராயங்களும் செயல் முறைகளும் இருக்கலாம், ஆனால் நாம் சொல்வது மட்டும்தான் சரியானது என்ற பிடிவாத நிலையில் இருந்து விடுபட்டு ஒருவரின் கருத்தை மற்றவர் பொறுமையுடன் செவிமடுத்து தமிழ் மக்களை ஒரு விமோசனப் பாதைக்கு இட்டுச் செல்லக் கூடியதும் சரியானதுமான பொதுக் கொள்கையும் அதைவென்றெடுக்கக் கூடிய போராட்ட வழிமுறைக்கும் வர பன்முக முயற்சிகள் செய்வதே இன்றைய தேவையாகும். இவற்றைச் செய்யத் தவறினால், வெறும் கற்பனை எதிர்பார்ப்புகளை மட்டும் நம்பினால், ஏகாதிபத்தியத்தினால் நன்கு போஷித்து வளர்க்கப்பட்டு தமிழ் மக்களை இனச் சங்காரம் செய்வதற்கு கங்கணம் கட்டிநிற்கும் பேரினவாத பெருமுதலாளித்துவ ஆளும் வர்க்க ஆட்சியின் கொடுமைகளை முடிவுக்கு கொண்டுவர முடியாது. எனவே தமிழ் மக்களின் விடுதலைப்பாதைக்கு ஆழமாகச் சிந்திக்கவேண்டிய மேற்கூறப்பட்ட அம்சங்களை தமிழ் மக்களும் அவர்களின் விடுதலையை நம்பும் அனைத்து சக்திகளும் தகுந்த சிந்தனைக்கு எடுத்துக்கொள்வது அவசியம் அதன் மூலமே அதிகரித்துவரும் தமிழ் மக்களுக்கு எதிரான அழிவுகளையும் அடக்குமுறைகளையும் தடுக்க

சூழ்நிலை ஆழமான அரசியல் சிந்தனைக்கு உரிய ஒரு காலமாகும். ஏனெனில் தமிழ் மக்களின் விமோசனத்திற்கென முன்வைக்கப்பட்ட ஒரு கொள்கை, அக்கொள்கையை நடைமுறைப் படுத்தி தமது இலக்கை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் என்பனவற்றின் சாதக பாதக விளைவுகள் உண்மையான ஒரு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எந்த ஒரு கட்சியாயினும், விடுதலை இயக்கமாயினும் தமது கொள்கை, நடைமுறை, வேலைத்திட்டம் என்பவற்றைக் குறைந்தது பத்தாண்டுகளுக்கு ஒருமுறையாவது மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது அவசியம். அவ்வாறான பரிசீலனை முற்றிலும் மக்கள் நலன் சார்ந்த நிலையில் விமர்சனமாகவும், சுய விமர்சனமாகவும் அமைந்தால் அது தமிழ் மக்களின் விடுதலைப் பாதைக்கு புதியதோர் நிலையைத் தோற்றுவிக்க முடியும்.

ஒரு நாட்டின், ஒரு வர்க்கத்தின் அல்லது ஒரு இனத்தின் விடுதலைக்கான இயக்கத்தின் தொடக்கப் புள்ளி கொள்கையாகும். இக்கொள்கை நம் கண்முன்னே உள்ள தமிழ் மக்களின் விடுதலைக்கென இதுவரை எக்கொள்கையும் வகுக்கப்படவில்லை என யாரும் வாதிட முடியாது. ஆனால் இதுவரை வகுக்கப்பட்ட கொள்கைகள் எவ்வளவு தூரத்திற்கு மேற்கூறப்பட்ட அடிப்படை அம்சங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டன என்பதே விவாதத்திற்குரியவையாகும். அதேவேளை இக்கொள்கைகள் எவ்வளவிற்கு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மக்கள் தமது அன்றாடவாழ்வில் இக்கொள்கைகளை ஒன்றாக இணைத்துக் கொண்டார்களா என்பது பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டியவையாகும். ஒட்டுமொத்தமாக, மேலெழுந்த வாரியாக அல்லது ஒரு மானசீகமாக விஷயங்களை அணுகுவதற்குப் பதிலாக மக்களின் அடிமட்ட அபிலாஷைகளுடன் வகுக்கப்பட்ட கொள்கையாக அமைந்துள்ளதா என்று பரீட்சிப்பதும் நடைமுறைத் தேவையாகும். எனவே இன்றைய நிலையில் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கக் கூடிய சரியான கொள்கையை கடந்த கால கொள்கை வகுப்பின் படிப்பினைகளாலும் அதன் நிகழ்கால

## வெகுஜனன்

எதுவாக இருந்தாலும் அதனால் மக்கள் என்ற அந்தப் பெரும் சமுத்திரத்தை அண்மிக்க முடியாது. மக்களை மனதார நேசித்து அவர்களின் விடுதலைக்கு தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்கும் தன்மை கொண்டவர்களால் உருவாகக் கூடிய ஸ்தாபனத்தினால் மட்டுமே மக்களை அணுகி அவர்களை ஒரு போராட்டத்திற்கு அணி திரட்ட முடியும்.

கொள்கையும் ஸ்தாபனமும் சரியான வகையில் அமைக்கப்பட்டால் அதன் அடிப்படையில் போராட்டத் தந்திரோபாயங்களும் வகுக்கப்பட முடியும். கொள்கை ரீதியில் எதிரியார்? நண்பன் யார்? என்று தீர்மானிக்கப்பட்டால் எதிரியைத் தனிமைப்படுத்தி தாக்கி அழித்தொழித்து முன்னேற நண்பர்களை தன்னுடன் ஐக்கியப்படுத்துவது ஒரு விடுதலைப் போராட்டத்தின் தந்திரோபாயங்களில் அடிப்படையான அரசியல் அம்சமாகும். இவ் அரசியல் அம்சம் ராணுவ போராட்டத்தில் அவர்களையும் பங்கெடுக்க வைக்கும். அல்லது தாங்கிக்கொள்ள முடியாத துன்பத்தால் மக்கள் விரக்தியுறும் சந்தர்ப்பங்களும் தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும். அது போராட்டத்தின் பாதையில் தளர்வையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தி விடக் கூடிய நிலையையும் கவனத்திற்கொள்வது அவசியம். ஒரு விடுதலைப் போராட்டத்திற்கென வகுக்கப்பட்ட கொள்கையாயினும், அதை அடைவதற்கான போர்த் தந்திரோபாயமாயினும் அவை நடைமுறை என்ற பரீட்சைக் களத்தில் மீண்டும் மீண்டும் அனுபவங்களைத் தொகுத்து மக்களுக்கும் போராட்டத்தின் முன்னேற்றத்திற்கும் பாதிப்புக்களை —பின்னடைவுகளை தரக் கூடிய அம்சங்களைத் துணிந்து நிராகரித்து சரியானவற்றைப் பேணி வளர்த்து முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலைப் பாதைக்கென கடந்த பத்து ஆண்டுகாலத்திற்கு சற்று மேலாக முன்வைக்கப்பட்ட கொள்கையும், அதைத் தொடர்ந்து நடைமுறைப் வழிமுறைக்கும் வர பன்முக முயற்சிகள் செய்வதே இன்றைய தேவையாகும். இவற்றைச் செய்யத் தவறினால், வெறும் கற்பனை எதிர்பார்ப்புகளை மட்டும் நம்பினால், ஏகாதிபத்தியத்தினால் நன்கு போஷித்து வளர்க்கப்பட்டு தமிழ் மக்களை இனச் சங்காரம் செய்வதற்கு கங்கணம் கட்டிநிற்கும் பேரினவாத பெருமுதலாளித்துவ ஆளும் வர்க்க ஆட்சியின் கொடுமைகளை முடிவுக்கு கொண்டுவர முடியாது. எனவே தமிழ் மக்களின் விடுதலைப்பாதைக்கு ஆழமாகச் சிந்திக்கவேண்டிய மேற்கூறப்பட்ட அம்சங்களை தமிழ் மக்களும் அவர்களின் விடுதலையை நம்பும் அனைத்து சக்திகளும் தகுந்த சிந்தனைக்கு எடுத்துக்கொள்வது அவசியம். அதன் மூலமே அதிகரித்துவரும் தமிழ் மக்களுக்கு எதிரான அழிவுகளையும் அடக்குமுறைகளையும் தடுத்து நிறுத்தவும் ஒரு முழுமையான விமோசனப்பாதையில் முன்னேறவும் முடியும்.

❀

# 2ம்தர பிரஜைகள்!

## நமது அரசியல் நிருபர்

தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறைகளைக் கண்டித்து சில மாதங்களுக்கு முன்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தமிழ் மக்களை அரசு இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியிருந்தது. இதைத் தொடர்ந்து இவ் இரண்டாந்தரப் பிரஜைகள் பற்றிய சாச்சைகள் பல கோணங்களில் இருந்தும் விவாதிக்கப்பட்டது. இதுபற்றிய சில குறிப்புகளை முன்வைப்பது குறிப்பிட்ட கூற்றை விளக்க உதவியாக இருக்கும்.

தமிழ் பேசும் மக்களில் மூன்று முக்கிய பிரிவினர் அடங்கியிருப்பதைக் காண முடியும், இலங்கைத் தமிழர், முஸ்லீம்கள், இந்திய வம்சாவழித் தமிழர் ஆகியோர். இம் மூன்று பிரிவினரின் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உள்ள ஒரு உட்பிரிவினரான தாழ்த்தப்பட்ட மக்கள் பன்னெடுங் காலம் தொட்டு அண்மைக்காலம் வரை சமுதாய நடைமுறை வாழ்க்கையின் பல முனைகளில் இரண்டாம் தர நிலையில் வைத்து நடாத்தப்பட்டு வந்திருக்கின்றனர். இன்றும் அதன் எச்ச சொச்ச நடைமுறைகள் சமுதாயத்தில் அம் மக்களுக்கு எதிராக வலுவுடையனவாக இருப்பதைக் காணமுடியும். இதுபற்றிய விளக்கமும் விவாதமும் இன்றைய நிலையில் அவசியமானதொன்றல்ல. அதற்கான சந்தர்ப்பம் ஏற்கனவேயும் எழுந்தது. எதிர்காலத்திலும் எழலாம். அதை ஒருபுறத்தில் வைப்போம்.

அடுத்ததான இரண்டாம் தரப் பிரஜைகள் பற்றிய சந்தர்ப்பம் இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் காலகட்டத்திற்குப் பின் நிகழ்ந்த ஒன்றாகக் காணமுடியும். அதுவே தமிழ் பேசும் மக்களில் ஒரு பிரிவினரான இந்திய வம்சாவழி மக்களான தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் மூலம் அதன் நடைமுறையின் கீழும் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டமையாகும். அவர்களின் பிரசாவுரிமைகள் ரத்துச்செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இலங்கையில் உள்ள ஏனைய மக்கள் அனுபவித்த பல அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதற்கான நிலை தோற்றுவிக்கப்பட்டு அம் மக்கள் இந் நாட்டின் தேசிய வாழ்வில் இருந்து ஒதுக்கப்பட்டு சகல வழிகளிலும் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கப்பட்டனர். இதற்கான வரலாற்றுச் சான்றுகளுடனான விளக்கம் வேறொரு சந்தர்ப்பத்தில் பார்க்க முடியும்.

இன்று இலங்கைத் தமிழர் என்ற நிலையில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் குறிப்பாகவும், தமிழ் பேசும் மக்கள் என்ற பதத்திற்குள் அடங்கும் ஏனைய மக்கள் அனைவரும் பொதுவாகவும் இலங்கையில் இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். சுதந்திரத்திற்குப் பின் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கையின் உண்மையான பொருளாதார அரசியல் கலாச்சார தன்மைகளின் சரியான வளர்ச்சிப் போக்கை விருத்தி செய்து இலங்கையின் அனைத்து மக்களுக்கும் பாகுபாடற்ற சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாகத் தமது

(2-ம் பக்கம் பார்க்க)

# மொழி பற்றிய மாக்சிச நோக்கு

## ஜே. வி. ஸ்டாலின்

**1950**

கேள்வி:- மொழியின் விசேட தன்மைகள் யாவை?

பதில்:- ஒரு சமுதாயம் இயங்கிக் கொண்டிருக்கும் காலம் முழுவதும் உள்ள ஒரு அசாதாரண அம்சமே மொழியாகும். ஒரு சமுதாயம் தோன்றி வளர்ச்சியடைவதோடு மொழியும் தோன்றி வளர்ச்சியடைகின்றது. அந்தச் சமுதாயம் இறக்கும் போது மொழியும் இறக்கின்றது. சமுதாயத்திற்கு வெளியே மொழி இல்லை. மொழியையும் அதன் வளர்ச்சி விதியையும் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் சம்பந்தப்பட்ட மொழிக்குரிய மக்களின் சரித்திரத்தை, அந்த மொழியைத் தோற்றுவித்தவர்களும், களஞ்சியப் படுத்துபவர்களுமான சமூகத்தின் சரித்திரத்தை வேறுபடுத்தாமல் ஆராய வேண்டும்.

மொழி ஓர் ஊடகம். மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ளவும் மொழி ஒரு கருவியாக விளங்குகின்றது. சிந்தனையோடு நேரடியாகத் தொடர்புள்ளதால் மொழி

அடிப்படைச் சொற்றொகுதியாகும். இது மொழியின் சொல் வளத்திலும் விசாலம் குறைவானதாகும். ஆனால் இது நீண்ட காலமாக, நூற்றாண்டுகளாக மொழிக்கு புதிய சொற்களை உருவாக்குவதற்கு ஓர் அடிப்படையாக விளங்குகின்றது. சொல்வளம் அந்த மொழியின் நிலையைப் பிரதிபலிக்கின்றது. செழிப்பான பன்முகப்பட்ட சொல்வளம், சிறப்பான, அதிக வளர்ச்சி பெற்ற மொழியாக விளங்கும்.

எவ்வாறாயினும் சொல்வளம் மட்டும் மொழியாகி விட முடியாது. அது மொழியின் ஆக்கப் பொருளாகும். கட்டிட வேலையில் கட்டிடப் பொருள்கள் கட்டிடமாக அமையாது. ஆனால் கட்டிடப் பொருட்கள் இல்லாமல் கட்டிடம் அமைக்க முடியாது. இதேபோன்று ஒரு மொழியின் சொல்வளம் மட்டும் மொழியாகிவிட முடியாது. எனினும் சொல்வளம் இல்லாமல் மொழியை அமைக்க முடியாது. ஆனால் சொற்களின் மாற்றங்களை, சொற்களை இணைத்து வசனமாக்குவதை விதி முறைப்படுத்தும் இலக்கணத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததும் ஒரு மொழி

போல் அல்லாமல், மொழி தளத்தை அகற்றும் வரை காத்திராமல், தளத்தை அகற்றுவதற்கு முன்பே, தளம் என்ன நிலையில் இருக்கின்றது என்பதைக் கருத்திற் கொள்ளாமல் சொல்வளத்தின் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

மேல் அமைப்புப் போல் பழையதை அழித்து விட்டு புதியதொன்றைக் காட்டாமல் ஒரு மொழியின் சொல் வளமானது உற்பத்தியின், கலாச்சாரத்தின், விஞ்ஞானத்தின் வளர்ச்சியோடு சமூக அமைப்பில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாற் ஏற்படும் புதிய சொற்களை கொண்டு நிரப்பப்படுகின்றது. மேலும்

### சென்ற இதழ் தொடர்

ஒரு சிறிய எண்ணிக்கையிலான தேவையற்ற சொற்கள் கைவிடப்படுகின்றபோதிலும் பெரும் எண்ணிக்கையிலான புதிய சொற்கள் சேர்க்கப்படுகின்றன. அடிப்படைச் சொற்றொகுதியானது அதன் சகல அடிப்படையிலும் பாதுகாக்கப்பட்டு மொழியின் சொல்வளத்திற்கு அத்திவாரமாக உபயோகிக்கப் படுகின்றது.

துருக்கிய உட்கிரகிப்பாளர்கள் நூற்றுக்கணக்கான வருடங்களாக பால்கன் மக்களின் மொழிகளை சின்னபின்னப்படுத்தி சேதப்படுத்தி அழிப்பதற்கு முயற்சித்தனர். இந்தக் காலப்பகுதியில் பால்கன் மொழிகள் கணிசமான மாற்றத்திற்குள்ளாகின. ஒரு சில துருக்கியச் சொற்களும், வெளிப்பாடுகளும் உட்கிரகிக்கப்பட்டன. சில ''இணைவுகளும்'' சில ''பிரிவுகளும்'' இடம் பெற்றன. எவ்வாறாயினும் பால்கன் மொழிகள் தமது தனித்தன்மையைப் பாதுகாத்து, தப்பித்துக் கொண்டன. ஏன்? அவற்றின் இலக்கண அமைப்பும், அடிப்படைச் சொற்றொகுதிகளின் முக்கிய பகுதியும் பாதுகாக்கப்பட்டதேயாகும்.

இவை யாவற்றிலுமிருந்து ஒரு மொழி, அதன் அமைப்பு ஒரு சரித்திர காலத்துப் பொருள் எனக் கருத இயலாது என்பதேயாகும். ஒரு மொழியின் அமைப்பும் அதன் இலக்கண அமைப்பும் அடிப்படைச் சொற்றொகுதியும் பல சரித்திர காலத்துப் பொருளாகும்.

அடிமைச் சமுதாய காலத்திற்கு முன்னர் மிகப் புராதன காலத்திலேயே தற்காலத்து மொழிக்கான அடிப்படைகள் இருந்தன என நாம் கருதலாம். ஒரு மிகச் சிறிய சொற்றொகுதியுடன் ஒரு சாதாரணமான மொழியென்ற போதும் ஒரு புராதன காலத்து இலக்கண அமைப்பைக் கொண்டிருந்த

கப்பட்டன. மொழி ஒரு குணத்திலிருந்து வேறொரு குணத்திற்கு மாறும் போது சடுதியாக, பழையதை ஓர் அடியில் அடித்துப் புதிய தொன்றினால் உருவாகப்படவேயில்லை. மொழி வளர்ச்சியில் நடைமுறையில் உள்ள மொழி சடுதியாக அழிந்து, சடுதியாக ஒரு புதிய மொழி உருவாக்கப்படும் சடுதியான வெடிப்பு என்பதை மார்க்சிசம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு மொழியின் முக்கியமான பகுதி அதன் இலக்கண அமைப்பும், அடிப்படைச் சொற்றொகுதியுமாகும். பிரெஞ்சு பூர்சுவா புரட்சியின் போது பிரெஞ்சு மொழியின் இலக்கண அமைப்பும், அடிப்படைச் சொற்றொகுதியும் பெரும் மாற்றம் இல்லாமல் பாதுகாக்கப்பட்டதுமல்லாமல் இன்றும் கூட தொடர்ந்தும் இருக்கின்றது. ஒரு மொழியை அழித்துவிட்டு ஒரு புதிய தேசிய மொழியை கட்டுவதை ஐந்து ஆறு வருடங்களில் சாதிக்கலாம் என்று சொல்வது கேலிக்கிடமானது என்பதைக் கூறத் தேவையில்லை. இதற்கு நூற்றாண்டுகள் தேவைப்படும்.

மொழிகள் தாவுதலால் புதிய மொழிகள் ஓர் அதிர்வெடிப்பாக தோன்றுகின்றன. ஒரு பழைய குணத்திலிருந்து ஒரு புதிய குணத்திற்கு சடுதியாக மாறுகின்றது எனக் கூறப்படுகின்றது. இது முழுப் பிழையாகும்.

மொழித்தாவல்கள் ஒரு நீண்ட சம்பவமாகும். அது

அந்த மொழியைத் தோற்றுவித்தவர்களும், களஞ்சியப்படுத்துபவர்களுமான சமூகத்தின் சரித்திரத்தை வேறுபடுத்தாமல் ஆராய வேண்டும்.

மொழி ஓர் ஊடகம். மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ளவும் மொழி ஒரு கருவியாக விளங்குகின்றது. சிந்தனையோடு நேரடியாகத் தொடர்புள்ளதால் மொழி சொற்களைப் பதித்து, சொற்களைத் தொடுத்து வசனங்களாக்குவதன் மூலம் மனிதனின் பகுத்தறியும் தன்மையையும், சிந்திப்பதன் போக்கையும் வெளிப்படுத்துகின்றது. அவ்வாறு செய்வதன் மூலம் மனித சமுதாயத்தில் சிந்தனைப் பரிமாறலைச் சாத்தியமாக்கின்றது.

சிந்தனைப் பரிமாறல் தொடர்ச்சியானதும், ஒரு முக்கிய தேவையுமாகும். அது இல்லாமல் இயற்கைக்கெதிராக மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தைத் தொடர்புபடுத்த முடியாது. தேவையான செல்வத்தை உற்பத்தி செய்யும் போராட்டத்தை ஒருங்கிணைக்க முடியாது. இதனால் சமுதாயத்தின் உற்பத்தி நடவடிக்கையின் வெற்றியை உறுதிப்படுத்த முடியாது. இதனால் சமுதாய உற்பத்தி நடைபெறுவதே சாத்தியமற்றதாய்விடும். இதன் விளைவாக ஒரு சமுதாயத்திற்கு விளங்கக்கூடிய, அதன் சகல அங்கத்தவர்களுக்கும் பொதுவான ஒரு மொழி இல்லாவிடில் சமுதாயம் உற்பத்தி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும். சமுதாயம் சின்னாபின்னப்பட்டு ஒரு சமுதாயமாக இருப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும். இந்த வகையில் மொழி பிணைப்புக்கு ஓர் ஊடகம் என்பது மட்டுமல்லாமல் அதே சமயம் சமுதாயத்தின் போராட்டத்திற்கும், வளர்ச்சிக்கும் ஒரு கருவியாக இருக்கின்றது.

ஒரு மொழியில் உள்ள சகல சொற்களையும் மொத்தமாக எடுத்தால் அதை சொல்வளம் எனத் தெரிந்து கொள்கின்றோம். ஒரு மொழியின் பிரதான பொருள் அதன் மூலச்சொற்கள் உட்பட பொருள்கள் கட்டிடமாக அமையாது. ஆனால் கட்டிடப் பொருட்கள் இல்லாமல் கட்டிடம் அமைக்க முடியாது. இதேபோன்று ஒரு மொழியின் சொல்வளம் மட்டும் மொழியாகிவிட முடியாது. எனினும் சொல்வளம் இல்லாமல் மொழியை அமைக்க முடியாது. ஆனால் சொற்களின் மாற்றங்களை, சொற்களை இணைத்து வசனமாக்குவதை விதி முறைப்படுத்தும் இலக்கணத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததும் ஒரு மொழியின் சொல்வளம் தாக்கமான முக்கியத்துவத்தைப் பெற்று மொழியை ஒரு சீரானதாகவும் முக்கிய பாத்திரத்தையும் வகிக்கச் செய்கின்றது. சொற்களை மாற்றம் செய்வதற்கும் அவற்றை இணைத்து வசனங்கள் புனைவதற்கும் உள்ள விதிகளை ஒன்று திரட்டியதே இலக்கணமாகும்.

சொற்களின் மாற்றத்திற்கு குறிப்பிட்ட சொற்களை எடுத்துக் கொள்ளாமல் பொதுவாகவே சொற்களை எவ்வாறு மாற்றம் செய்ய வேண்டுமென்றும், குறிப்பிட்ட வசனங்களை எவ்வாறு ஆக்க வேண்டுமென்று கூறாமல் பொதுவாக வசனங்களை எவ்வாறு அமைக்க வேண்டுமெனவும் விதிமுறை செய்வதே இலக்கணத்தின் அதி விசேடமான அம்சமாகும். நீண்ட காலப் போக்கில் மனிதமனத்தில் சிந்தித்து வெளியிடப்பட்ட முடிவே இலக்கணமாகும். இது சிந்தனையின் பிரமிக்கத்தக்க சாதனையை எடுத்துக் காட்டுகின்றது. இந்த வகையில் இலக்கணம் கேந்திர கணிதத்தைப் போன்றது.

உற்பத்தியுடன் நேரடியாகவன்றி பொருளாதாரத்தின் மூலமாகத் தொடர்பு கொண்டுள்ள மேல் அமைப்பைப் போலல்லாமல் மொழி மனிதனின் உற்பத்தி நடவடிக்கையுடனும், அவனது சகலவிதமான வேலை நடவடிக்கையுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது. இதன் காரணமாகவே ஒரு மொழியின் சொல்வளம் எளிதில் மாற்றத்திற்குள்ளாகக் கூடிய நிலையில் இருந்து கிட்டத்தட்ட சதா மாற்றமடைந்த வண்ணமாயிருக்கின்றது. மேல் அமைப்பைப்

## சென்ற இதழ் தொடர்

ஒரு சிறிய எண்ணிக்கையிலான தேவையற்ற சொற்கள் கைவிடப்படுகின்றபோதிலும் பெரும் எண்ணிக்கையிலான புதிய சொற்கள் சேர்க்கப்படுகின்றன. அடிப்படைச் சொற்றொகுதியானது அதன் சகல அடிப்படையிலும் பாதுகாக்கப்பட்டு மொழியின் சொல்வளத்திற்கு அத்திவாரமாக உபயோகிக்கப் படுகின்றது.

இது விளங்கிக்கொள்ளக் கூடியதே. பல சரித்திர கால கட்டங்களுக்கூடாக பயனுள்ளதாக உபயோகித்து வந்த அடிப்படைச் சொற்களின் தொகுதியை அழிக்க வேண்டிய தேவையில்லை. ஒரு குறுகிய காலத்தினுள் ஒரு புதிய அடிப்படைச் சொற்றொகுதியை உருவாக்க முடியாது என்பது ஒருபுறம் இருக்க நூற்றாண்டுகளாகச் சேர்க்கப்பட்ட அடிப்படைச் சொற்றொகுதியை அழிப்பதானது மொழியைச் செயலிழக்கச் செய்வதுடன் மக்களிடையேயான தொடர்பு சீர்குலைந்துவிடும்.

அடிப்படைச் சொற்றொகுதியில் ஏற்படும் மாற்றத்திலும் மிகவும் மந்தமான வேகத்திலேயே ஒரு மொழியின் இலக்கண அமைப்பில் மாற்றம் ஏற்படுகின்றது.

எனவே இலக்கண அமைப்பும் அடிப்படைச் சொற்றொகுதியும் மொழியின் அத்திவாரமாகும். அதன் விஷேசத் தன்மை இதுவேயாகும்.

பலவந்தமாக உட்கிரகித்தலை மொழிகள் தாங்கும் பிரமிக்கத்தக்க சக்தியையும், பெரும் ஸ்திரத்தையும் கொண்டுள்ளன என்பதைச் சரித்திரம் கூறுகின்றது. இந்த சம்பவத்தை விளங்குவதற்குப் பதிலாக சில சரித்திராசிரியர்கள் தமது ஆச்சரியத்தை தெரிவிப்பதுடன் தம்மை மட்டுப்படுத்தி விடுகிறார்கள். ஆனால் இதில் ஆச்சரியப்படுவதற்கு காரணம் எதுவும் இல்லை. இலக்கண அமைப்புக்களினதும், அடிப்படைச் சொற்றொகுதிகளினதும் ஸ்திரத்திலேயே மொழிகளின் ஸ்திரம் தங்கியுள்ளது.

அதன் இலக்கண அமைப்பும் அடிப்படைச் சொற்றொகுதியும் பல சரித்திர காலத்துப் பொருளாகும்.

அடிமைச் சமுதாய காலத்திற்கு முன்னர் மிகப் புராதன காலத்திலேயே தற்காலத்து மொழிக்கான அடிப்படைகள் இருந்தன என நாம் கருதலாம். ஒரு மிகச் சிறிய சொற்றொகுதியுடன் ஒரு சாதாரணமான மொழியென்ற போதும் ஒரு புராதன காலத்து இலக்கண அமைப்பைக் கொண்டிருந்த போதும் தனக்கே உரித்தான ஓர் இலக்கண அமைப்பைக் கொண்டிருந்தது.

உற்பத்தியில் மேலும் ஏற்பட்ட வளர்ச்சி, வர்க்கங்களின் தோற்றம், எழுத்து புகுத்தப்பட்டமை, நிர்வாகத்திற்கு கிட்டத்தட்ட நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட எழுத்துத் தொடர்பு தேவைப்பட்ட அரசின் தோற்றம், மேலும் அதிகளவில் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட எழுத்துத்தொடர்பு தேவைப்பட்ட வர்த்தகத்தின் வளர்ச்சி, அச்சு யந்திரத்தின் தோற்றம், இலக்கிய வளர்ச்சி போன்றன யாவும் மொழியின் வளர்ச்சியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. இந்தக் காலத்தில் கணங்களும், இனங்களும் உடைந்து, சிதறி ஒன்றுடன் ஒன்று கலந்தன, ஒன்றையொன்று மாறின, பின்னர் தேசிய மொழிகளும் அரசுகளும் தோன்றின. புரட்சிகள் இடம் பெற்றன. பழைய சமூக அமைப்புக்கள் புதியனவற்றால் நிரப்பப்பட்டன. இவை யாவும் மொழியிலும் அதன் வளர்ச்சியிலும் மேலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின.

எவ்வாறாயினும் மேல் அமைப்பின் வளர்ச்சியைப் போலவே மொழியும் இருந்ததை அழித்து புதியதொன்றினால் கட்டியெழுப்பப்பட்டது என நினைப்பது ஒரு மாபெரும் தவறாகும். உண்மையில், நடைமுறையில் உள்ள மொழிகளை அழித்து புதிய மொழிகள் உருவாக்கப்படவில்லை. அதற்கு மாறாக நடைமுறையில்உள்ள மொழிகளின் அடிப்படைத் தொடக்கங்களை விரிவு படுத்தியும், பூரணப்படுத்தியும் உருவாக்

சொல்வது கேலிக்கிடமானது என்பதைக் கூறத் தேவையில்லை. இதற்கு நூற்றாண்டுகள் தேவைப்படும்.

மொழிகள் தாவுதலால் புதிய மொழிகள் ஓர் அதிர்வெடிப்பாக தோன்றுகின்றன. ஒரு பழைய குணத்திலிருந்து ஒரு புதிய குணத்திற்கு சடுதியாக மாறுகின்றது எனக் கூறப்படுகின்றது. இது முழுப் பிழையாகும்.

மொழித்தாவல்கள் ஒரு நீண்ட சம்பவமாகும். அது நூற்றாண்டுகளாகத் தொடர்கின்றன. எனவே ஒரு சடுதியான அதிர் வெடிப்புக்கு இடமேயில்லை.

மேலும் இரண்டு மொழிகளுக்கிடையே தாவல்கள் ஏற்படும் போது ஒரு புதிய மூன்றாவது மொழி உருவாகின்றதெனக் கருதுவது தவறாகும். உண்மையில் இந்தத் தாவல்களின் பயனாக இரண்டில் ஒரு மொழியே வெற்றி பெறுகின்றது. அது அதன் இலக்கண அமைப்பையும், அதன் அடிப்படைச் சொற்றொகுதியையும் வைத்துக் கொண்டு தன்னகத்தேயுள்ள வளர்ச்சி விதிக்கமைய தொடர்ந்தும் வளர்ச்சி பெறும் அதே வேளை இரண்டாவது மொழி படிப்படியாக அதன் குணத்தை இழந்து படிப்படியாக இறந்துபோகின்றது.

எனவே தாவல்கள் மூலமாக புதிய மூன்றாவது மொழி உருவாகுவதில்லை. இரண்டு மொழிகளில் ஒன்று நிலை கொண்டு விடுவதோடு அதன் இலக்கண அமைப்பையும், அடிப்படைச் சொற்றொகுதியையும் வைத்துக் கொண்டு தன்னகத்தேயுள்ள வளர்ச்சி விதிக்கமைய வளருவதற்கேதுவாயிருக்கின்றது.

உண்மையில் இந் நடவடிக்கையில் வெற்றி பெற்ற மொழி தோற்கடிக்கப்பட்ட மொழியினால் ஓரளவு சிறப்புப் பெறுகின்றது எனினும் இது அதைப் பலப்படுத்துகின்றதேயொழிய பலவீனப் படுத்துவதில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

# மாக்ஸியம் என்றால் என்ன?

★ ★ ★ அவதானி

உலக வரலாறு கண்ட நூற்றுக்கணக்கான பெரும் சிந்தனையாளர்களுள் மாக்ஸ் ஒருவர். அவர் மறைந்து நூறாண்டுகளாகியும் அவரது பங்களிப்பு உலகின் சகல நாடுகளிலும் தொடர்ந்தும் அதிகரித்துவரும் முக்கியத்துவத்துடன் விளங்குகிறது. முதலாளித்துவ சமூக விஞ்ஞானிகள் கூட மாக்ஸின் சில பொருளாதார சமுதாயவியல் கருத்துக்களைப் பயன்படுத்தாமல் செயற்பட முடியாதளவுக்கு மாக்ஸின் சிந்தனைகள் இன்று தம்மை நிலைநாட்டிக் கொள்கின்றன. ஆயினும் மாக்ஸியம் என்றால் என்ன என்ற கேள்விக்குரிய விடையோ ஒவ்வொருவரதும் சமுதாயப் பார்வையையும் வர்க்கச் சார்பையும் பொறுத்து வேறுபடுகின்றது. சில வியாக்கியானங்கள் மாக்ஸியத்தின் எதிரிகளால் அதை இழிவுபடுத்தும் நோக்குடன் தரப்படுவன. வேறுசிலர் தம்மை மாக்ஸியவாதிகள் என்று கருதுவோரால் தரப்படுவன. சில சமயங்களில் மாக்ஸியத்தை ஒரு விறைப்பான ஏட்டுச்சுரக்காய்ச் சிந்தனை என்று காட்டுவதில் மாக்ஸியவாதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிலரும் மாக்ஸியத்தின் சில பகிரங்க எதிரிகளும் மிகவும் உடன்படுவதைக் காணலாம். சில வியாக்கியானங்கள் மாக்ஸியம் என்பது பலவீனமான ஒரு சமுதாயவிளக்கத்தை உடைய சந்தர்ப்பவாத அரசியல் நடைமுறை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்த முனைகின்றன. ஏகாதிபத்தியவாதிகள் மாக்

நடைமுறை ஒன்றைச் சொல்வதாகக் கூறிக்கொள்ளும் ஒன்று அல்ல. மாக்ஸியம் கூறும் உண்மை நடைமுறையில் பெறப்படும் தகவல்களைச் சார்ந்தது. எனவே மனித அனுபவம் விருத்தியடைவதையொட்டி மனிதன் அறியும் உண்மையும் மாற்றம் அடைகிறது என்பதை மாக்ஸியம் ஏற்றுக்கொள்கிறது. மாக்ஸிய நடைமுறை ஒரு சமுதாயத்தின் சமகால நிலையையொட்டியது என்பதாலும் ஒரு சமுதாய இலட்சியத்தையும் சார்ந்தது என்பதாலும், வேறுபடும் சமுதாய வரலாற்றுச் சூழல்களால் பாதிக்கப்படாத நிரந்தரமான சூத்திரங்கள் எதுவுமே இல்லை என்பதை மாக்ஸியம் ஏற்றுக்கொள்கிறது. மாக்ஸியம் விஞ்ஞானரீதியான முறையில் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை அதன் வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து கண்ட உண்மைகளின் அடிப்படையில் மனிதனது முழுமையான வளர்ச்சிக்கு அவசியமானதும் வரலாற்றுப் போக்கில் தவிர்க்க இயலாததுமான அதி உயர்ந்த சமுதாய அமைப்பை அடையாளங்காட்டி, அந்த இலக்கை அடையும் வழியும் வழிகாட்டும் சக்தியும் குறைகள் நிறைந்த சமுதாயத்திலேயே தோன்றி வளர்கின்றன என்று கூறுகிறது. அத்துடன் நில்லாமல் மனிதனை மனிதன் சுரண்டவும், நசுக்கவும் அழிக்கவும் இடமளிக்கும் சமுதாய முறை தானே மாறும்வரை காத்திருப்பது அர்த்தமற்றது என்பதால் அந்தப் புரட்சிகர மாற்றத்

முதல்வாதமும் இன்றைக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டவை. ஆயினும் அவ்விரண்டையும் ஒன்றுபடுத்திய பெருமை மாக்ஸுக்கு உரியது. இயங்கியல் பொருள்முதல்வாத அணுகுமுறைமூலம் மாக்ஸ் மனித சமுதாயத்தை அதன் வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்தார். அதன் மூலம் அவர் சமுதாய மாற்றங்கள் சமுதாயத்தில் உள்ள வர்க்கங்களிடையே ஏற்படும் மோதலின் விளைவாக ஏற்படுவதாக எடுத்துக் காட்டினார். சுருக்கமாக, மனித இனத்தின் வரலாறு வர்க்கப்போராட்டத்தின் வரலாறு என்று அவர் எடுத்துக்காட்டினார். மனித சமுதாயம் வர்க்க அடிப்படையில் அமைந்தது என்பதும் வர்க்கங்கட்கிடையில் மோதல்கள் நிகழ்கின்றன என்பதும் மாக்ஸுக்கு முன்னரே சுட்டிக்காட்டப்பட்டவை. ஆயினும் சமுதாய அமைப்பிலும் மாற்றத்திலும் வர்க்கங்களுடையதும் வர்க்கப்போராட்டத்தினதும் பங்கை முறையாக விளக்கிய பெருமை மாக்ஸுக்கே உரியது.

சமுதாயத்தில் தனியுடைமை தோன்றியதினின்றே மனிதனை மனிதன் சுரண்டவும் அடக்கியொடுக்கவும் தேவை ஏற்பட்டது என்பதுடன் சுரண்டற் சமுதாய முறைகளில் அதி முன்னேறிய அமைப்பு முதலாளித்துவம் என்பதையும் அங்கு எவ்வாறு சுரண்டல் நடக்கிறது என்பதையும் மாக்ஸ் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டினார்.

## ஒரு கேள்வியும் பதிலும்

டனவே. சோஷலிஸப் போராட்ட இயக்கத்திற்கு பிரெஞ்சு நாட்டில் நீண்ட கால மரபு இருந்து வந்தது. இதனால் மாக்ஸின் சாதனை இவற்றின் இணைப்பு மட்டுமே என்று கருத்து அல்ல. மெய்யியல் சமுதாயத்தை மாற்றும் நோக்குள்ள ஒரு சிந்தனை முறையாக வளர்த்து முதலாளித்துவச் சுரண்டலின் அடிப்படையை சரியாக அடையாளம் கண்டு விஞ்ஞான சோஷலிஸத்தை கற்பனா சோஷலிஸத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டிய பெருமை மாக்ஸுக்கும் அவரது நெருங்கிய தோழரான ஏங்கல்சுக்கும் உரியது.

மாக்ஸியம் நிரந்தரமான, எக்காலத்துக்குமான, பூரண உண்மைகளைப் பிரகடனம் செய்யவும் முனையவில்லை, மானிட அறிவின் வளர்ச்சிக்கேற்ப உண்மை பற்றிய மானிடப்பார்வையும் மாறும் என்பதை ஏற்கிறது என்றால் மாக்ஸியம் கூட வளர்ச்சிக்கும் மாற்றத்துக்கும் உரிய ஒன்றாகிவிடாதா என்ற கேள்வி எழுகிறது. அதற்கான பதில்: அது உண்மையே. மாக்ஸியம் வளர்ச்சிக்கும் மேலும் விருத்திக்கும் உரிய ஒரு விடயமே. ஆயினும் மாற்றங்கள் இருவாறாக அமையலாம். ஒருவகையானவை மாக்ஸியத்தின் அடிப்படையான ஆய்வுமுறையைச் சார்ந்து அதன் இலட்சியத்தை ஏற்றுச் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள வரலாற்று மாற்றங்களையும் கலாச்சார, தேசிய, பிரதேச வேறுபாடுகளையும் கணிப்பில் எடுத்து அதனை வளர்ப்பன. லெனின், மாஓ போன்றோரினது பங்களிப்பு அவ்வகையினது. மற்றவை மாக்ஸியத்தின் சாராம்சத்தையே சிதைத்து அதன் இலட்சியத்தைப் பேரளவில் ஒப்புக்கொண்டு, உண்மையில் அவற்றை மறுக்குமாறு அமைவன. புரட்சியை நிராகரிக்கும் பல வேறு சீர்திருத்தவாதப்போக்குகளும் இத்தகையன. இவற்றை விட மாக்ஸியத்தை விறைப்பான ஒரு கோட்பாடாகக் கருதி அதைக் குருட்டுத்தனமாகப் பிரயோகிக்கும் போக்குகளும் உள்ளன. இவ்வாறான ஏட்டுச்சுரக்காய் மாக்ஸியம் ட்ரொட்ஸ்கி வாதிகளிடையே பரவலாகக் காணப்படும்.

மாக்ஸியம் மாக்ஸியவாதிகளிடையே நேர்மையான விமர்சன—சுயவிமர்சனப் பார்வையை வலியுறுத்துகிறது. அவ்வாறில்லாதவர்களை மாக்ஸியவாதிகள் என்று கருதுவது தவறு. மாக்ஸியத்தின் போர்வையில் உலாவும் கொச்சைத்தனங்கள் பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் கவனிப்போம்.

★

## தோழர் மாஓ கூறுகிறார்

மனிதகுல வரலாறு என்பது தேவை மண்டலத்திலிருந்து சுதந்திர மண்டலத்தை நோக்கித் தொடர்ச்சியாக முன்னேறும் ஒன்றாகும். இந்தப் போக்கு முடிவற்றது. வர்க்கங்கள் உள்ள எந்தச் சமுதாயத்திலும் வர்க்கப் போராட்டம் முடிவின்றி நிகழும். வர்க்கமற்ற சமுதாயத்தில் புதுமைக்கும் பழைமைக்கும் இடையில், சரிக்கும் பிழைக்கும் இடையில் நிகழும் போராட்டம் ஒருபோதும் ஓயாது. உற்பத்திப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை ஆகிய துறைகளில் மனிதகுலம் இடையறாது முன்னேற்றம் அடைகின்றது. இயற்கையும் இடைவிடாது வளர்ச்சி அடைகின்றது. அவை ஒருபோதும்

...காய்ச் சிந்தனை என்று காட்டுவதில் மாக்ஸியவாதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிலரும் மாக்ஸியத்தின் சில பகிரங்க எதிரிகளும் மிகவும் உடன்படுவதைக் காணலாம். சில வியாக்கியானங்கள் மாக்ஸியம் என்பது பலவீனமான ஒரு சமுதாயவிளக்கத்தை உடைய சந்தர்ப்பவாத அரசியல் நடைமுறை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்த முனைகின்றன. ஏகாதிபத்தியவாதிகள் மாக்ஸியத்தை இவ்வாறான ஒன்றாகவும் மதம், ஜனநாயகம் போன்றவற்றை அழிக்க முனையும் ஒரு பயங்கரசக்தி என்றும் காட்டுவதற்கு முயல்வதில் அதிசயமில்லை ஆயினும் நமது தேவை அவ்வாறானதல்ல. எனவே மாக்ஸியத்தை அதன் முக்கியமான கூறுகளைக் கொண்டு முதலில் அடையாளம்காண்போம். அதன்பின்னரே நமக்கு மாக்ஸியத்தை ஆக்கபூர்வமான முறையில் அறியவும், ஆராயவும், பயன்படுத்தவும், விருத்தி செய்யவும் முடியும்.

மாக்ஸியம் என்பது ஒரு ஆய்வு முறையும், ஒரு சமுதாய இலட்சியமும், அந்த இலட்சியத்தை அடைவதற்கான ஸ்தாபனமும் சார்ந்த ஒன்று ஆகும். மாக்ஸியம் சமுதாயத்தை அறியவும் அதன்மூலம் அதனை மாற்றவும் முற்படுகிறது. இந்த வகையில் அது மற்றச் சிந்தனை மரபுகளினின்றும் வேறுபடுகிறது. வேறெந்தச் சமுதாய இலட்சியத்தையும் விட முழுமையானதாக இருக்கிறது. மாக்ஸியம் தன்னை விஞ்ஞான ரீதியானதென்று கருதுகிறது. அதாவது மாக்ஸியம் நடைமுறையிலிருந்து தன் உண்மைகளைக் கிரகிக்க முயல்வதுடன் அவற்றை நடைமுறையில் பரீட்சிக்கவும் ஆயத்தமாக உள்ளது. எனவே, மாக்ஸியம் எக்காலத்துக்குமான மாருத உண்மைகளின் திரட்டோ அல்லாமல் எச் சூழலிலும் மாறுபடாத சமுதாய...

...தாய அமைப்பை அடையாளங்காட்டி, அந்த இலக்கை அடையும் வழியும் வழிகாட்டும் சக்தியும் குறைகள் நிறைந்த சமுதாயத்திலேயே தோன்றி வளர்கின்றன என்று கூறுகிறது. அத்துடன் நில்லாமல் மனிதனை மனிதன் சுரண்டவும், நசுக்கவும் அழிக்கவும் இடமளிக்கும் சமுதாய முறை தானே மாறும்வரை காத்திருப்பது அர்த்தமற்றது என்பதால் அந்தப் புரட்சிகர மாற்றத்தைக் கொண்டுவரும் ஸ்தாபனம் ஒன்றைக் கட்டியெழுப்புமாறும் அந்த மாற்றத்தைச் செயற்படுத்துமாறு போராடி அதன் மூலம் முழு மானிட இனத்தினையும் விடுதலை செய்யுமாறும் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமைச் சக்தியான பாட்டாளி வர்க்கத்துக்கு அறை கூவுகிறது.

மாக்ஸியம் விஞ்ஞான ரீதியானது என்கிறோம், மதங்கள் உட்பட்ட மற்றைய மெய்யியல்கள் (தத்துவ சாத்திரங்கள்) மாக்ஸியத்தினின்றும் எவ்வாறு வேறுபடுகின்றன? மாக்ஸிய சிந்தனையின் அடிப்படை இயங்கியல் பொருள் முதல் வாதம். மனித உலகைப் புலனுணர்வு சார்ந்த அனுபவ உண்மைகளின் அடிப்படையில் அறியவும் விளக்கவும் முற்படும் கொள்கை பொருள் முதல் வாதமாகும். பொருட்களைத் தரப்பட்ட இயல்புகளைக் கொண்ட மாருத தன்மையுடையனவாகக் கருதாமல் எதிர்மாறான தன்மைகளை (முரண்பாடுகளை) தம்முட்கொண்ட சேர்க்கைகளாகவும் அம் முரண்பாடுகளின் விருத்தியின் விளைவாகவே வளர்ச்சியுட்பட்ட சகலமாற்றங்களும் ஏற்படுவதாகவும் கருதுவது இயங்கியல். பொருள்முதல் வாதத்திற்கு எதிர்மாறான நிலைப்பாடுகளைக் கருத்துமுதல் வாதம் எனலாம். இயங்கியலுக்கு மாறான நிலைப்பாட்டை மாரு நிலையியல் எனலாம். இயங்கியலும் பொருள்...

சமுதாயத்தில் தனியுடைமை தோன்றியதினின்றே மனிதனை மனிதன் சுரண்டவும் அடக்கியொடுக்கவும் தேவை ஏற்பட்டது என்பதுடன் சுரண்டற் சமுதாய முறைகளில் அதி முன்னேறிய அமைப்பு முதலாளித்துவம் என்பதையும் அங்கு எவ்வாறு சுரண்டல் நடக்கிறது என்பதையும் மாக்ஸ் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டினார்.

மனிதனுடைய விடுதலைக்கும் விமோசனத்திற்கும் வழியமைக்கும் சமுதாயத்தை அடையாளங்காட்டிய மாக்ஸ் அதை அடையும் மார்க்கம் பற்றியும் தெளிவான விஞ்ஞானரீதியான கருத்துக்களைக் கூறினார். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலேயே உலகம் முழுவதிலும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களது விமோசனம் சாத்தியம் என்பதையும், அதற்கான போராட்டம் அடிப்படையான வர்க்க முரண்பாட்டின் தன்மை காரணமாகத் தவிர்க்க முடியாமல் வன்முறை சார்ந்தே அமையும் என்றும் வர்க்கங்கள் அற்ற சமதர்ம (கம்யூனிஸ) சமுதாயம் உருவாக்கப்படும்வரை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஒன்று நிலவுவது தவிர்க்க முடியாததும் அவசியமானதும் என்றும் மாக்ஸ் சுட்டிக் காட்டினார்.

மாக்ஸியத்தின் தோற்றுவாய்கள் என்று ஜேர்மன் மெய்யியல், (தத்துவ சாத்திரம்) ஆங்கிலேயப் பொருளியல், பிரெஞ்சு சோஷலிஸம் ஆகிய மூன்றையும் சுட்டிக் காட்டுவர். மாக்ஸ் இயங்கியல் பொருள் முதல்வாதத்தை வந்தடைய ஜேர்மன் மெய்யியற் துறையில் அவரது பயிற்சியே காரணமாய் இருந்தது. மாக்ஸ் தன் சமகால சமுதாய ஆய்வில் பயன்படுத்திய பல பொருளியல் தகவல்களை பிரித்தானிய முன்னோடிகளால் கண்டறியப்பட்...

மனிதகுல வரலாறு என்பது தேவை மண்டலத்திலிருந்து சுதந்திர மண்டலத்தை நோக்கித் தொடர்ச்சியாக முன்னேறும் ஒன்றாகும். இந்தப் போக்கு முடிவற்றது. வர்க்கங்கள் உள்ள எந்தச் சமுதாயத்திலும் வர்க்கப் போராட்டம் முடிவின்றி நிகழும். வர்க்கமற்ற சமுதாயத்தில் புதுமைக்கும் பழைமைக்கும் இடையில், சரிக்கும் பிழைக்கும் இடையில் நிகழும் போராட்டம் ஒருபோதும் ஓயாது. உற்பத்திப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை ஆகிய துறைகளில் மனிதகுலம் இடையருது முன்னேற்றம் அடைகின்றது. இயற்கையும் இடைவிடாது வளர்ச்சி அடைகின்றது. அவை ஒருபோதும் ஒரே மட்டத்தில் நிற்பதில்லை. எனவே. மனிதன் இடைவிடாது அனுபவத்தைத் தொகுத்து, தொடர்ந்து கண்டுபிடித்து, புதியன புனைந்து, சிருஷ்டித்து, முன்னேறிக் கொண்டே இருக்கவேண்டும். தேக்கம், சோர்வு, மடிமை, தன்னிறைவு ஆகிய கருத்துக்கள் எல்லாம் தவருனவை. அவை தவருயிருப்பதன் காரணம், அவை கடந்த பத்து லட்சம் ஆண்டுகால சமுதாய வளர்ச்சியின் வரலாற்று உண்மைகளுக்குப் பொருந்தாதவை மாத்திரம் அல்ல, இன்றுவரை நாம் அறிந்த இயற்கையின் (அதாவது விண்வெளிப் பிழம்புகள், பூமி, உயிர், இதர இயற்கை விஞ்ஞானம்—இவற்றின் வரலாற்றால் வெளிப்படுத்தப்பட்ட இயற்கையின்) வரலாற்று உண்மைகளுக்கும் பொருந்தியவையல்ல.

★ ★ ★

நாம் மார்க்ஸிஸவாதிகள். நாம் ஒரு பிரச்சினையை அணுகும்போது, யதார்த்த உண்மைகளிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமேயன்றி, வெறும் வரைவிலக்கணங்களிலிருந்து அல்ல என்றும், இந்த உண்மைகளை ஆராய்வதன் மூலம் நமது வழிகாட்டும் கோட்பாடுகள், கொள்கைகள். வழிமுறைகள் ஆகியவற்றை வகுக்க வேண்டும் என்றும் மார்க்ஸிஸம் போதிக்கின்றது.

★ ★

## மொழி பற்றிய......

(4-ம் பக்கத்தொடர்)

கேள்வி:- வர்க்கங்கள் மொழியின் மேல் செல்வாக்கைப் பிரயோகிக்கின்றனவா, அவை மொழியில் குறிப்பிட்ட சொற்களை, வெளிப்பாடுகளைப் புகுத்துகின்றனவா, அத்துடன் வர்க்க ஈடுபாட்டைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட சொல்லுக்கு வேறொரு கருத்துத் தெரிவிக்கப்படுவதுண்டா?.

பதில்:- வர்க்கங்கள் மொழியின் மேல் செல்வாக்குப் பிரயோகிக்கின்றன என்பது உண்மை தான். தமது சொந்த குறிப்பிட்ட சொற்களையும், வெளிப்பாடுகளையும் மொழியில் புகுத்துகின்றன, சிலசமயம் ஒரு சொல்லை அல்லது வெளிப்பாட்டை வேறுவிதமாக விளங்கிக் கொள்கின்றன. இதில் எதுவித சந்தேகமுமில்லை.

எவ்வாருயினும் ஒரு சில குறிப்பிட்ட சொற்கள் மொழி முழு மக்களுக்கும் பொதுவானது என்ற தன்மையை மாற்றப் போவதில்லை. மிகப் பிரமாண்டமான சொற்குவியல்களும், வெளிப்பாடுகளும் சமுதாயத்தின் சகல வர்க்கங்களுக்கும் பொதுவாகவே இருக்கின்றன. ★

# கொள்ளைகள் தடுத்து நிறுத்தப்படாது விட்டால்

# தமிழ் மக்கள் பட்டினிக்குள் தள்ளப்படுவர்!

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் மத்தியில் தற்போது அதிகம் விநியோகிக்கப்படும் துண்டுப்பிரசுரங்கள் 'வேண்டுகோள்' பற்றியவையாகும். இவ் வேண்டுகோள் யாவும் கொள்ளைகளுக்கும், ஆட்கடத்தல்களுக்கும் எதிராக 'விடுதலை இயக்கங்களுக்கு' என்றே வெளியிடப்படுகின்றன. அப்படியாயின் தமிழ் மக்கள் தொடரும் கொள்ளைகளாலும், ஆட்கடத்தல்களாலும் எவ்வளவிற்கு விரக்தியடைந்துள்ளனர் என்பதையே இப்பிரசுரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வடக்குக் கிழக்கில உள்ள அரச—கூட்டுத்தாபன நிறுவனங்கள் ஒரு சில மட்டுமே. இலைமறைகாய் போல் உள்ள இவ் நிறுவனங்களில் கொள்ளைகள் தண்ணிபட்டபாடாக நடைபெற்று வருகின்றன. இதைச் சாட்டாக வைத்து இவற்றை மூடிவிட ஆட்சியும் சந்தர்ப்பம் பார்த்துள்ளது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. வடக்கின் மிகப் பெரும் தொழிற்சாலையான காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் இருபதுக்கு மேற்பட்ட தடவைகள் கொள்ளை இடம் பெற்றுள்ளன. அத் தொழிற்சாலை ஊழியர்களின் பணிவான வேண்டுகோள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அதுவும் மூடப்படலாம்.

இவை போன்று தனியார், கூட்டுறவு நிறுவனங்களில் கொள்ளைகள் தொடருகின்றன. யாழ்-ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் பணம், எரிபொருள், என்பன 22 தடவைகளில் கொள்ளை அடிக்கப்பட்டுவந்துள்ளன, அதைத் தடுக்க முனைந்த ஒரு உதவி முகாமையாளரின் உயிரே கொள்ளைக்கூட்டத்தால் பலியாக்கப்பட்டது. அண்மையில் 10 லட்சம் ரூபா பெறுமதியான சிகரட் கொள்ளை நடந்தது. அந் நிறுவனத்தின் இறுதி வேண்டுகோள் சங்கத்தை மூடிவிடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதாகும். நாவற்குழியில் அன்ரூஸ் கம்பனியின் ஊழியர்கள் நாலாயிரம் பேர் பாதிக்கப்படப் போவதாகக்கூறி கொள்ளையை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்க முற்பட்டனர். இவை சில உதாரணங்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் இயக்கங்களின் பெயரால் இப்போது உள்ள பிரதான ஓட்டம் கொள்ளைகளும். ஆட்கடத்தல்களாகும். இவ்வாறு தொடர்ந்தால் தமிழ் மக்களை அடக்கி நசுக்க அரசுக்கு அதிக சிரமமோ, பலமோ தேவையில்லை. ஒன்று தமிழ் மக்கள் விரக்தியுற்று விடுவார்கள், இரண்டாவது எஞ்சியுள்ள அரைகுறைத் தொழில்களையும் இழந்து பட்டினிக்குள் தள்ளப்படுவர். ஒரு நிறுவனத்தில் கொள்ளை நடப்பதால் அங்கே மீண்டும் மீண்டும் நடப்பதால் அந் நிறுவனம் இழுத்து மூடப்படும்போது பாதிக்கப்படுவது அதில் வேலை செய்பவர்களும் அவர்களை நம்பிவாழும் குடும்பங்களுமாவர். அது மட்டுமல்ல அந் நிறுவனத்துடன் தொடர்புள்ள அனைத்து மக்களும் பாதிப்புறுவர் உதாரணமாக சீமெந்து தொழிற்சாலை பூட்டப்பட்டால் அதில்வேலை செய்யும் 4,000 தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் மட்டுமன்றி கட்டிடத் தொழிலாளர்கள் தொட்டு கல்லடிக்கும் ஏழைகள் வரை சமுதாய ரீதியாக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதேபோல் எரிபொருள் கொள்ளையால் எரிபொருள் தட்டுப்பாடும். கள்ளச்சந்தையும் ஏற்பட்டுள்ளன. போக்குவரத்து சீர்குலைந்து மக்கள் இரண்டு மடங்கு பணம் கட்டணமாகக் கொடுக்கவேண்டியுள்ளது. மரக்கறி தொடக்கம் சகல உணவுப் பொருள்களின் விலைகளும் ஏறி இருப்பதை காணமுடியும்.

இந்நிலைபற்றி கொள்ளைக்காரர்கள் புரிந்துகொள்வதில்லை. இத்தகைய உண்மைகள் புரியாத நிலையிலேயே ஆடு, மாடு, கோழி திருடிய கள்வர்கள் சமூக விரோதிகளாக்கப்பட்டு வீதிக் கம்பங்களில் தூக்கப்பட்ட அதே வேளை ஏதாவது ஒரு பெயரில் தமிழ்த் சமுதாயத்தையே குட்டிச்சுவராக்கும் வகையில் கொள்ளையடிக்கும் இச் சமூக விரோதிகளுக்கு தண்டனை என்ன? இக் கொள்ளையர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் துப்பாக்கிகளும், குண்டுகளும் எதுவாக இருந்தாலும் நீண்டநாட்களுக்கு மக்கள் மத்தியில் நிலைக்க முடியாது. மக்கள் இன்று வாய் திறக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் சரி பிழை பற்றிப் பேசிவருகிறார்கள். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு கொள்ளையர்களையும், ஆயுதமேந்திய சண்டியர்களையும் இனம் கண்டு வருகிறார்கள். மக்களே இவர்களைக் கண்டுபிடித்து, விசாரித்து, தண்டனைகளும் வழங்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை. எனவே எந்த இயக்கமாவது, அல்லது கட்சியாவது, ஸ்தாபனமாவது கொள்ளையும், ஆட்கடத்தலும், ஆயுதச் சண்டித்தனமும் மக்களுக்கு எதிராகத் தன் கைவரிசையைக் காட்ட முற்படும்போது பார்த்துக் கொண்டிருக்காது மக்களுடன் இணைந்து இச்சமூக விரோதிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு முன்வரல் வேண்டும். தமிழ் மக்களின் விமோசனப் பாதைக்கு இத்தகைய புல்லுருவிகளை அகற்றுவதும் அடக்குவதும் அவசியமாகும். ஆளும் பேரினவாதிகள் ஒருபுறத்தால் தமிழ் மக்களை அழித்துவரும் அதே வேளை மறுபுறத்தில் விடுதலையின் பெயரால் கொள்ளைகளும் ஆட்கடத்தல்களும் இடம் பெற்றுவருவது எவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல, இவற்றுக்கு ஒரு முடிவு வேண்டும். மக்கள் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும். ★

## அரசியல் தீர்வுக்கு

...... 1ம் பக்கத் தொடர்

கூடியதொன்றேயாகும். அரசியல் தீர்வுக்கான பாதையில் இந்தியா ஒரு அயல் நாடு என்ற வகையில் குறிப்பிடத்தக்க பங்கினை மட்டுமே வகிதான அங்கம் பெற்றாலே தீர்வு பூரணத்துவம் பெற்றதாக அமையும். அவர்களை இதுவரை அரசாங்கம் கூறிவந்ததைப்போல் 'பயங்கர

கனவே வழிநடந்த அழிவுப் பாதையைத் தொடரவே விரும்புகிறது என்பதே அர்த்தமாகும். ★

## கடலிலும் தரை

...... 1ம் பக்கத் தொடர்

செய்த ஒன்றுமறியாத மக்களின் மீது திடீரெனப் பாய்ந்து கடல் கொலை வெறியாட்டம் நடத்தியுள்ளனர். பச்சிளம் குழந்தை உட்பட

யுள்ளனர். இதில் மொத்தம் 146 சிங்களவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் சாதாரண பொது மக்களேயாவர். ஏன் இந்த

# அரசியல் தீர்வுக்கு ...... 1ம் பக்கத் தொடர்

...... 1ம் பக்கத் தொடர்

கூடியதொன்றேயாகும். அரசியல் தீர்வுக்கான பாதையில் இந்தியா ஒரு அயல்நாடு என்ற வகையில் குறிப்பிடத்தக்க பங்கினை மட்டுமே வகிக்கமுடியும். அதற்கு அப்பால் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் இனப் பிரச்சினையோடு சம்மந்தமுடைய தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடனேயே நடத்தப்படல் வேண்டும். அதையே இந்தியாவும் விரும்பக்கூடியது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்னும்போது ஏற்கனவே பாராளுமன்றத்திற்கு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் பேச்சுவார்த்தையில் அங்கம் பெற வேண்டும். ஆனால் அவர்களின் பாராளுமன்ற உறுப்புரிமையை அரசியல் அமைப்புக்கு கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட ஆறாவது திருத்தம் இல்லாமல் செய்துவிட்டது. எனவே அவர்களது பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் மீளப்பெறும் வகையில், அதாவது தமிழ் மக்களின் ஜனநாயகத் தெரிவு உரிமைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஆறாவது திருத்தம் வாபஸ் பெறப்படல் வேண்டும். அதன் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக கூட்டணியினர் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளல்வேண்டும். இது கூட்டணியினரின் அரசியல் நிலைப்பாட்டைப் பற்றிய விமர்சன விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட இன்றைய தேவை கருதிய ஒன்றாகவே காணவேண்டும்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு தமிழ் தீவிரவாத இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். அவர்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வில் பிரதான அங்கம் பெற்றாலே தீர்வு பூரணத்துவம் பெற்றதாக அமையும். அவர்களை இதுவரை அரசாங்கம் கூறி வந்ததைப்போல் 'பயங்கரவாதிகள்' என்று பார்ப்பதை நிறுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்மந்தமாகவே அவ் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற தன்மையில் வைத்து அவர்களுடனும் பேசவேண்டும் என்ற நிலைக்கு அரசு முன்வரல் வேணடும். எனவே தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுடன் பேசுவதற்கும். அல்லது அவர்களின் கருத்துக்களை அறிவதற்கும பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஐந்தாம் பிரிவு பெரும் தடையாக உள்ளது. எனவே அத்தடையை அரசு அகற்றவேண்டும்.

அதேவேளை அரசாங்கம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து ராணுவத்தை வாபஸ் பெறவும் அல்லது ராணுவத்தை முகாங்களில் நிலை கொள்ளச் செய்யவும் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவர இயலும்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை ஒரு சரியான அரசியல் தீர்வின் அடிப்படையில் வழங்குவதன் மூலமே நாடும் முழு மக்களும் எதிர்நோக்கியுள்ள இன்றைய நெருக்கடி மிக்க நிலையில் இருந்து விடுபடமுடியும். அவ்வாறு விடுபடுவதையே அனைத்து மக்களும் விரும்புகிறார்கள். அவ்விருப்பத்தை அரசு புரிந்துகொள்ளுமானால் மேற்கூறிய அடிப்படையில் நான்கு விடயங்களையும் செயல்படுத்த முன்வரல் வேண்டும். இதைச் செய்யப் பின்வாங்கினால் அரசு ஏற்கனவே வழிநடந்த அழிவுப் பாதையைத் தொடரவே விரும்புகிறது என்பதே அர்த்தமாகும். ★

---

## எருதுகள்......

2-ம் பக்கத் தொடர்

மையான கம்யூனிஸ்ட்டுக்கள் மனிதர்களது மத உணர்வுகளை மதிக்குமளவுக்கு மதவாதிகள் மற்ற மதத்தவர்களது மத உணர்வுகளை மதிப்பதில்லை என்பது நாம் அறிந்ததே. மற்ற இன மக்களின் உணர்வுகளை மதிப்பதன் அவசியத்தை உணராதவர்களின் அபாயகரமான இனவாதம் பற்றியும் நாம் நன்கு அறிவோம். தங்களது குறுகிய தேவைகளை விட வேறு எதையுமே கணிப்பில் எடுக்கப்பழகாத சிலரால் தான் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்கின்றன. அவர்களது பார்வை ஒரு பரந்த மனிதாயிமான உணர்வாலோ சக மனிதனுடனான நேயத்தாலோ பக்குவப்படுத்தப்பட்டிருந்தால் மற்ற இனத்தவர்களது உணர்வுகளை மதிக்கப் பயின்றிருப்பார்கள். இவ்வாறான பொறுப்புணர்வற்ற இல தீவிரவாத சக்திகளது செயல்கள் ஒருபுறமிருக்க, எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்கிற விதமாக அரசாங்கமும் அதன் பேரினவாத சக்திகளும் அதன் அடக்குமுறை இயந்திரமும் செயற்படுவது நீண்டகாலத்தில் மட்டுமல்ல குறுகிய காலத்திற்கூட தேசிய ஐக்கியத்திற்கும் தேச நலனுக்கும் கெடுதலானது. மக்களுக்குள்ளே பகைமையை விதைத்துச் சொந்த நலனைக் காக்க முனைவோர் அதன் விளைவுகளை அறுவடை செய்யும் காலம் வெகு தொலைவில் இல்லை. ★

---

# கடலிலும் தரை ...... 1ம் பக்கத் தொடர்

...... 1ம் பக்கத் தொடர்

செய்த ஒன்றுமறியாத மக்களின் மீது திடீரெனப் பாய்ந்து கடல் கொலை வெறியாட்டம் நடத்தியுள்ளனர். பச்சிளம் குழந்தை உட்பட இதுவரை முப்பத்தைந்துபேர் பலியாகி உள்ளனர். பலர் படுகாயங்கள் அடைந்துள்ளனர். இதில் விஷேசம் என்னவெனில் துப்பாக்கிகளோ வெடிகுண்டுகளோ உத்தியோக பூர்வமாகப் பாவிக்கப்படவில்லை. பதிலாக வாள், கம்பி, பொல்லுகள் போன்ற 'காடையர் ஆயுதங்கள்' பாவிக்கப்பட்டுள்ளன.

இவைபோன்ற ஆயுதம் தரிக்காத, நிராயுதபாணிகளான, ஒன்றுமறியாத அப்பாவி மக்களின் மீது நடைபெற்றுவரும் கொலைபாதகங்களை அண்மைக்காலங்களில் இஸ்ரேலிய சியோனிச வாதிகளும், தென் ஆபிரிக்க நிறவெறி ஆட்சியினரும் செய்துவருவதை கேள்விப்பட்டிருக்கமுடியும். பௌத்த தர்மத்தைப் பின்பற்றுவதாகவும், தார்மீக ஆட்சி செய்வதாகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகவும் சதா கூறிக்கொள்ளும் இன்றைய ஆட்சியில்—அதன் மேற்பார்வையில் இடம்பெறும் மனித வதைகள் தமிழ் மக்களையோ அன்றி ஏனைய சிறுபான்மை மக்களையோ மட்டுமின்றி பெரும்பான்மையான சிங்கள மக்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய சம்பவங்களாகும்.

இதே வேளை அநுராதபுரத்தில் திடீரென ஒரு கொலைவெறியாட்டத்தை இனம்தெரியாத சிலர் நடத்தியுள்ளனர். இதில் மொத்தம் 146 சிங்களவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் சாதாரண பொது மக்களேயாவர். ஏன் இந்த வெறியாட்டம் என்பது இதுவரை மர்மமாகவே உள்ளது. பஞ்சாப் தீவிரவாதிகள் ஒன்றுமறியாத இந்துக்களை கொன்று ஒழிக்கும் பாணியில் அமைந்த அநுராதபுரப் படுகொலைகளில் எவர் ஈடுபட்டிருந்தாலும் அது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதாகும். இதுபோன்ற ஒன்றுக்கு மறுத்தான் என்று கூறிச் சாதாரண பொது மக்களை அவர்கள் எந்த இனம், மதத்தைச் சேர்ந்தோராயினும் பழிவாங்கப்படக்கூடாது. இது போன்ற சம்பவங்கள் இனங்களுக்கிடையில் ஒருவரது நியாயமான கோரிக்கைகளையும், போராட்டங்களையும் மற்றவர் ஆதரித்து நிற்கும் சரியான நிலைப்பாட்டைக் குழப்பி மோதலை மேலும் வளர்க்கும் பேரினவாத வெறியர்களுக்கே உதவக் கூடியது.

எனவே தமிழ் மக்கள் மீது தொடரப்படும் மனித வதைகளுக்கு உடன் முடிவு வேண்டும். அதேபோல் சிங்கள மக்கள்மீது பழிதீர்க்கும் படுகொலைகளுக்கும் முடிவு வேண்டும். மொத்தத்தில் சகல விதமான படுகொலைகளுக்கும் முடிவு ஏற்பட உரிய நடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்படல் வேண்டும். இதையே மனித நேயம் கொண்ட அனைவரும் விரும்புகிறார்கள். ★

---

## விடை இங்கே

## சவப் பெட்டி

---

அச்சுப்பதிவு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் வெளியீடு: சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.